விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 26 சனிக்கிழமை (12.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

## 8 உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவியேற்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் வடமாகாண சபைத தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர்களில் 8 பேர் பங்கேற்கவில்லை.

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கான பதவியேற்பு மற்றும் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தவிர்ந்த கூட்டமைப்பில் அங்கம்

20-ம் பக்கம் பார்க்க

## மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

உயிரிழந்த மாவீரர்களிற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின பதவியேற்பு விழாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர் தினமான நவம்பர் 27ஆம் திகதியும் இப்பதவியேற்பு விழாவில் நினைவு கூரப்பட்டுள்ளதோடு மாவீரர்களின் இலட்சியங்கள் வென்றெடுக்கப்படல் வேண்டும் எனற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் பெரு வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வு நேற்றுக்காலை 9 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இப்பதவியேற்பு விழா ஆரம்பம் எமக்காக உயிரிழந்த மாவீரர்களுக்கான மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகும் என விழா ஏற்பாட்டாளர்களினால் அறிவிக்கப்பட்டு மாவீரர்களிற்கு அக வணக்கத்துடனேயே ஆரம்பமானது. நேற்றையதினம் வடக்கு அமைச்சர்களாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் பதவியேற்றுக்

20-ம் பக்கம் பார்க்க

## ஆயுத அடக்குமுறைகளை தவிர்த்து ஜனநாயக பாதையில் பயணிப்போம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை

(யாழ்ப்பாணம்)

எங்கள் கடந்த காலம் எப்படி இருந்ததாயினும் இப்பொழுது நாங்கள் ஜனநாயக வாழ்க்கையில் காலடி பதித்துள்ளோம் என்பதை எக்கட்சியினரும் மறக்கக் கூடாது என்றும் ஜனநாயகத்தில் பேச்சுவார்த்தையும் இணக்கமுமே முக்கியம் என்றும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர்மேலும் தெரிவிக்கையில்அரசியலில்நுழைவது பணம்சம்பாதிப்பதறகும்

19-ம் பக்கம் பார்க்க





வடமாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போது ...

## போராட்டத்திற்கான தடை கண்டிக்கப்பட வேண்டியது

### மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறும் காலத்தில் போராட்டங்கள் நடத்தப்படக் கூடாது என்ற உத்தரவு கண்டிக்கப்பட வேண்டியது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறும் முக்கிய நகரங்களில் போராட்டங்கள், பேரணிகள் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த உத்தரவானது அடக்குமுறையாகவே கருதப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை மூடி மறைக்கும் நோக்கில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என அவ் அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கையாளர்களை ஒடுக்கும்வகையில்இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட

02-ம் பக்கம் பார்க்க

## அரசியல் தீர்வில் அரசு அசமந்தம்

### சர்வதேசம் தலையிட அதுதான் காரணம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்படுவதற்கு முக்கியமான காரணம் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாக செயற்பட்டு ஒரு அரசியல் தீர்வைக் காண முன்வராமையே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்குமாகாணசபையின்ஆளும கட்சி உறுப்பினர்களின் பதவிப் பிரமாண நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்

19-ம் பக்கம் பார்க்க



## தமிழ் மக்கள் ஆணை வழங்கியது மாவீரர்களின் கல்லறையிலிருந்தே!

### உணர்ந்து செயற்படுங்கள் என்கிறார் சிறிதரன்

(யாழ்ப்பாணம்)

எங்கள் ஒவ்வொரு வெற்றிக்குப பின்னாலும் கந்தக வெடிகளுடன் சென்ற போராளிகளின் கனவுகளும ஆயிரமாயிரம் மாவீரர்களின் கல்லறைகளும் உள்ளன.

இவர்களின் போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்று (நேற்று) நீங்கள் போராளிகளாக பதவிப்பிரமாணம் செய்துள்ளீர்கள்.

ஆகவே உறுப்பினர் பதவிகள் அமைச்சுப்பதவிகள்எந்த தனிநபரையும் அலங்கரிக்கப் போவதில்லை.

இந்த மண்ணின் இன விடுதலைக்காக, வாழ்விற்காக, இருப்பிற்காக மக்களின் பிரதிநிதிகளான நீங்கள் போராட வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவியேற்பு விழா நேற்று காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்கள் மண்ணும் மண்சார்ந்த வாழ்வும் ஒரு புதிய வரலாற்றில் நாங்கள் காலடி எடுத்து வைக்கின்றோம்.

தமிழீழம் கேட்டு போராடி, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு கேட்டு அதன்பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக 13 [illegible]

19-ம் பக்கம் பார்க்க

## சம்பந்தன், விக்னேஸ்வரனுக்கு முடிசூட்டி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சா க.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சமபந்தன் ஆகியோருக்கு முடி சூட்டிக் கௌரவிக்கப்பட்டது.

வடக்குமாகாணசபையின்ஆளும கட்சி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே முதலமைச்சர் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் ஆகியோருக்கு விழா மேடையில் வைத்து முடிசூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு வெள்ளியிலான வேல் ஒன்றும் வழங்கப்பட்டது.

இதேவேளை கடந்த 7ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கு மாகாண முதலமைச்சரின் பதவிப்பிரமாண நிகழ்வையடுத்து ஜனாதிபதியினால் பிள்ளையார் சிலை ஒன்றும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போராட்டத்திற்கான...

டுள்ளது.

இந்த உத்தரவானது பொதுநலவாய நாடுகளின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு புறம்பானது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது பொதுநலவாய நாடுகள் அமர்வுகளை இலங்கையில் நடத்தக் கூடாது என்பதற்கான மற்றுமொரு சான்றாகும் என சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

உலக நாட்டுத் தலைவர்களிடம் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்கள் சென்று சேரக் கூடாது என்பதற்காகவே இலங்கை அரசாங்கம் இவ்வாறான தடைகளை விதித்துள்ளதாக அவ் அமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது. (செ-11)

## முன்பள்ளி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள எவர் சைன் முன்பள்ளி மீது இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு இரவு இடம்பெற்றுள்ள இத்தாக்குதல் சம்பவத்தில் குறித்த முன்பள்ளி அலுவலக ஜன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் அலுமாரிகளும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இதில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்து சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நேற்று முன்தினம் முன்பள்ளி ஆசிரியர் தினவிழா இடம்பெற்றதாகவும் அன்றைய தினமே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இரு மாதங்களுக்கு முன்னர் குறித்த முன்பள்ளியில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (செ-5)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயச் சூழலில் நிறுத்தப்பட்ட புத்தம்புது சைக்கிள் ஒன்று நேற்று களவாடப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை ஆலய சூழலில் சைக்கிளினை பூட்டிவிட்டு கோயிலுக்குச் சென்ற வேளையில் பூட்டு உடைக்கப்பட்டு சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் அப்பகுதியில் தொடர்ந்தும் நடைபெறுவதால் துவிச்சக்கர வண்டிகளின் பாதுகாப்புத் தொடர்பில் மாற்று ஏற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் செய்ய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (ந)


**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நீல நிற YAMAHA FAZER WR-XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மலிவான நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

**விலை : 260,000/-**

தொடர்புகளுக்கு : 0779107153

A.G. செல்வம்

107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

(4143)



**காணி விற்பனைக்கு**

தொட்டிலடி, சங்கானை மெயின் வீதி, கோழிப் பண்ணை அருகில் 11 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

**தொடர்புகளுக்கு:-**

**077 841 2933**

(சி-5156)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு.**

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2011**

1. கலை முதற் தேர்வு - 2011
2. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி -I -2011
3. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-II-2011
4. சிறப்புக் கலைமாணி பகுதி-III-2010& 2011

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.100/=க்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 x 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி *15.11.2013* (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

**குறிப்பு:**

கலைமாணிக் கற்கை நெறி தொடர்பாக, கல்வியாண்டு 2011/2012 இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக் கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை *(Semester based course unit system and Grade Point Average evaluation)* அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், ஏற்கனவே கலைமாணிக் கற்கை நெறிக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**

**09.10.2013**

(சி-5151)




**சீரடி சாயி மந்திரில்**

**பாபாவின் 95வது**

**மஹாசமாதி தினநிழ்வும்**

**பிக்ஷா சோனி வைபவமும்**

அன்பான பக்தர்களே!

**(12.10.2013) இன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை பூசை**

**(13.10.2013) ஞாயிறு காலை 9 மணிமுதல் 12 மணிவரை பூசை**

**(14.10.2013) திங்கள் மாலை 2.15 முதல் 6.30 மணிவரை பூசை**

✸ **13.10.2013** (ஞாயிறு) 11.30 மணிக்கு

"பிக்ஷா சோனி" சீர்டியில் நடைபெறுவது போன்று நடைபெறும்..

✸ **14.10.2013** (மஹாசமாதி தினம்) மாலை

4 மணிக்கு விசேட துணி பூசை (ஹோமம்) இடம்பெம்.

பாபா அருள்பெற அனைவரும் வருக

1314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 321 1605, 0777 222 1605.

- ஆலயத்தினர் -

(4156)



**வல்லிபுர நாதரின் பாதமலர் பணிகின்றேன்...!**



மச்சமாய் ஆமையாகிப் பன்றியாய் ஆனமால்நீ
நரசிம்மன் வாமனனாய்ப் பரசுராமன் ஆனவன்நீ
உச்சப்புகழ் படைத்துநின்ற ராமன்பல ராமனும்நீ
உலகமெலாம் போற்றுகின்ற கண்ணனாக வந்தவன்நீ
நிச்சயமாய்க் கல்கியாக அவதரிப்பாய் நீயென்று
நின்னடியார் வழிமேலே விழிவைத்துக் காத்திருப்பர்
அச்சுதனே கோண்டாவில் கிழக்கூரில் அருள்பொழியும்
வல்லிபுர நாதரேயுன் பாதமலர் பணிகின்றேன.!

ஆக்கம் : சின்னையா சிவபாலன்;
நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(கோண்டாவில் கிழக்கு அருள்மிகு வல்லிபுரநாதர் தேரும் திருநாள் 12.10.2013 சனிக்கிழமை இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.)





**இணுவில் திருப்பதி**

**அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்**

**விஜயவருஷ நூதன பிரம்மோற்ஸவம்**

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய வருடம் புரட்டாதி மாதம் 26-ம் நாள் (12-10-2013) சனிக்கிழமை எமது ஆலயத்தில் பிரம்மோற்ஸவத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் நிகழத் திருவருள் கைகூடியுள்ளமையால் பக்தப்பெருமக்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானின் திவ்ய வடிவங்களைத் தரிசித்து அவன் அருளுக்கு பாத்திரமாகும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

காலை 07 மணியளவில் திருமஞ்சனம்
காலை 10 மணியளவில் திவ்யதரிசனம் ஆராதனை
மாலை 06 மணியளவில் பஜனை
மாலை 07 மணியளவில் திரு வீதிப்புறப்பாடு.

(4151)

ஆதீனகர்த்தா
திரு. ச. கணேசலிங்கம்

0212242300

சுபம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கலியுகம்

"அப்பா மகனைப் பார்த்து கடைக்குப் போய் பேப்பர் வாங்கிக் கொண்டுவா!" என்கிறார். அதற்கு அவன் "வேற ஆளைப் பாருங்க" என்று சொல்லிவிட்டு போகிறான். "உங்கள் பிள்ளையே உங்களுக்கு இப்படி சொல்லி விட்டுப் போகிறானே!" என்று கேட்டால் "அவனைச் சொல்லிக் குற்றமில்லை. கலி முற்றிவிட்டது" என்கிறார் அப்பா.

இந்த யுகங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். வருடம்–மாதம்–வாரம்–நாள் இப்படி யுகங்கள் நான்கு. போன வருடம் உன்னை சென்னையில் பார்த்தேன் என்று சொல்ல முடியும். ஆனால்போன யுகத்தில் நான் உன்னை அங்கு பார்த்தேன் என்று சொல்ல முடியுமா?

எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதற்கு "மேதாதிதி" என்பவர்தான் முதலில் விளக்கம் கொடுத்தார். அவரின் கணிப்பின்படி கிருதயுகம் 4800 வருடம், திரோதாயுகம் 3600 வருடம், துவாரகயுகம் 2400 வருடம், கலியுகம் 1200 வருடம். சாஸ்திர ரீதியாக வேறு கணக்கு சொல்கிறார்கள் அவர்களின் கணக்கின் படி வருடம் 1000, 2000,3000, 4000 என்று உள்ளது.

சுமார் 60 வருடத்துக்கு முன் பரமஹம்ஸ ஸ்ரீராஜ நாராயண் ஷட் சாஸ்திரி என்பவர் ஒரு நூல் எழுதினார். அதில் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளார். 1943 ஒகஸ்ட் முதலாம் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்து விட்டது என்கிறார். பாகவத சுலோகப்படி சூரியன், சந் திரன், குரு, பூச நட்சத்திரங்கள் எல்லாம் சமகாலத்தில் ஒரே இராசியில் பிரவேசிக்கும் போது அல்லது சந்திரன், சூரியன், குரு இந்த மூன்றும் பூச நட்சத்திரத்தில் ஒரே இராசியில் ஒரே நேரத்தில் சேரும் போது கலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்த பூரண யோகம் 1943 ஒகஸ்ட் முதலாம் திகதி வந்து விட்டது. அது தான் இவர் சொல்லும் கணக்கு! இருந் தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் கிடைப்பதற்கு 100 வருடங்கள் ஆகுமாம். கிருதயுகத்தில் மக்களுக்கு நோய் வராதாம். அனைவரின் கோரிக்கையெல்லாம் பூர்த்தியாகுமாம்! மனிதர்களின் ஆயுள் 400 வருடமாம்! அதன் பின்னர் மறுபடியும் யுகம் மாற மாற– தர்மத்தின் அளவு குறைய குறைய ஆயுளும் குறையுமாம்! கிருத யுகத்தில் ஒரே மதம்! ஒரே கடவுள்! என்ற நிலைமைக்கு உலகம் வந்துவிடுமாம்! தருமரின் காலத்தில் நடந்த கதை ஒன் றும் உண்டு! அது துவாரக யுகத்தின் கடைசிக் கட்டம்.

அப்பொழுது ஒருவன் தனது நிலத்தை இன்னொரு வனுக்கு விற்றான். நிலத்தை வாங்கியவன் அதில் உழவு செய்ய ஆரம்பித்தான். நிலத்தை உழும்போது அதில் ஒரு புதையல் கிடைத்தது! உடனே அதை எடுத்துக் கொண்டு நிலத்தை விற்றவனிடம் போனான்.

"இதோ பாருங்கள்! இந்த புதையல் உங்களுக்குத் தான் சொந்தம். நீங்கள் நிலத்தைத்தான் என்னிடம் விற்றீர்களே தவிர புதையலை அல்ல! அதனால் புதையலை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றான். ஆனால் அவன் அதை வாங்க மறுத்து விட்டான். "இந்தப் புதை யல் உனக்குத்தான் சொந்தம். எப்பொழுது நிலத்தை விற்றேனோ அப்பவே இதையும் விற்றதாக அர்த்தம்!" என்றான்.

இருவரும் தருமரிடம் போய் தங்களுடைய பிரச்சினை களை சொல்கிறார்கள்! என்ன தீர்ப்பு வழங்குவது என்று தெரியாமல் முழித்தார் தருமர். கடைசியில் ஒரு பத்து நாள் கழித்து வரச் சொல்லி அவர்களை அனுப்பி விட்டார். அதற்குள் கலியுகம் பிறந்து விட்டது! அதன் பின்னர் இருவரும் வந்தனர்.

நிலத்தை விற்றவன் புதையல் எனக்குத் தான் சேர வேண்டும் என்கிறான். வாங்கியவன், "அதெல்லாம் கிடையாது... எப்பொழுது நிலத்தை விற்றாரோ அப்பொ ழுதே புதையலையும் விற்று விட்டார்" என்று அர்த்தம் என்கிறான்!

தருமர் சிரிக்கிறார். கலியுகம் பிறந்து விட்டது என் பதை உணர்கிறார். ஒருவர் கத்தரி விதை வாங்கிக் கொண்டு வந்தார். அதை தனது நெருங்கிய சிநேகித னிடம் கொடுத்து உங்கள் தோட்டத்தில் போடுங்கள் என்றார்.

"காசு எவ்வளவு" என்றார் இவர். "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட் டார் அவர். ஒருநாள் தற்செயலாக நண்பரைப் பார்க்க வந்தவர், "கத்தரி எப்படி இருக்கிறது" என்றார் நண்பர்.

"நன்றாக காய்த்திருக்கிறது" என்றார் நண்பர். அப் படியா... "ஒரு நான்கு காய் கொடுங்கள்... வீட்டுக்கு கொண்டுபோக..." என்றுகேட்டார். அதற்கு அவர், "ஐய் யய்யோ! காயெல்லாம் முற்றிவிட்டதே" என்றார்.

இவருக்கு முகம் வாடி விட்டது. திரும்பி வரும்போது, உண்மையை அறிவதற்காக அந்த ஊர்க்காரரைப் பார்த்து, "அதோ அந்த வீட்டில் கத்தரிக்காய் முற்றி விட்டதா" என்று விசாரித்தார். அதற்கு அவர் "காய் முற்றவில்லை... கலிமுற்றிப் போச்சு!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து தேசிய விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை கைத்தொழில் அபி விருத்திச்சபையினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தேசிய விருதுக்குரியவர்களை தேர்வு செய்வதற்கான போட்டிகளில் பங்கு கொள்ள கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சின் வழிகாட்டலில் ஷில்ப–2013 கர்மாந்த தேசிய கண்காட்சி விற்பனை நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் டஸுசெம்பர் 25 ஆம் திகதி வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதனையொட்டியே மேற்படி விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கைத்தொழில் சார்ந்த சுய தொழில் முயற்சியாளர்கள் தேசிய விருதுக்கான போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ளும் கைத்தொழில் முயற்சியாளர்களில், சிறிய, நடுத்தர கைத்தொழில் துறை மற்றும் சுயதொழில் முயற்சிகள் துறையில் மிகச் சிறந்த தொழில் முயற்சியாளர்களாக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தங்க விருதுடன் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

15 கைத்தொழில் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறு வோருக்கு முறையே 30 ஆயிரம்ரூபா, 20 ஆயிரம்ரூபா மற்றும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசில்களும் வெள்ளிவிருதுகளும் வழங்கப்படவுள்ளன.

மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

எனவே, மேற்படி விருதுக்கான போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. (அ–5)

# வடக்கு மாகாண சபை மக்களாட்சி புரிய வேண்டும்

## யாழ். ஆயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை முரண்பாடுகளையும் எதிர்ப்புகளையும் நீக்கி மக்களாட்சி புரிய வேண்டும் என யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்தார்.

தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய, போற்றக் கூடிய ஆட்சியினை இந்த மாகாணசபை நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்களின் பதவியேற்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்தின் பின்னர் தமிழர் பிரதேசத்தில் தமிழராட்சி ஒன்று நிறுவப்பட்டு உள்ளது. இவ் ஆட்சியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முரண்பாடு இல்லாமல் தூய்மையான முறையில் நேர்மையாக நடத்த வேண்டும்.

பிரச்சினைகள் காணப்படாலும்அதனை பேசி தீர்த்து இணக்கப்பாட்டு முறையில் தமது ஆட்சியினை நடத்திச் செல்ல வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல இறைவன் ஆசிர்வதிப்பார் என்றார். (அ–4–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 120 |
| தக்காளி | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 60 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 100 | 60 | 100 |
| பூசணி | 20 | 20 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 170 | 100-140 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 100 |
| பாகற்காய் | 120 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 90 | 70 | 100 |
| பீற்றூட் | 10 | 15 | 30 |
| கறிமிளகாய் | 120 | 50 | 100 |
| முருங்கைக்காய் | 40-70 | 60 | 120 |
| போஞ்சி | 120 | 90 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 35 |
| தேசிக்காய் | 500 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 |

# இராசி பலன்

*12.10.2013*
*(புரட்டாதி 26, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 4.31 மணிவரை*
*பூரட்டாதி முற்பகல் 9.33 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*நான்காம் புரட்டாதிச்சனி*

**மேடம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறியுண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வருகையுண்டு.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், தவறவிட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தொழில் சம்பந்தமான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**சிங்கம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு, கௌரவக் குறைவான நாள்.

**கன்னி** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** நன்மையான சம்பவங்கள் நடைபெறலாம், பகைவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்திதரும், விருந்தினர் வருகையுண்டு.

**விருச்சிகம்** விழாக்களில் கலந்து மகிழும் நாள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சிதரும், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், இளைய சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், மாதர் நட்புண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடம் முற்கோபத்தைக் குறைப்பது நல்லது, போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நடைபாதைகளில் அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றக் கோரிக்கை

## யாழ்.மாநகர சபை முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியின் இருபக்கங்களிலும் நடைபாதைகளிலும் காணப்படும் தற்காலிக கடைகள், விளம்பரப் பலகைகள் மற்றும் அனுமதி பெறாமல் கடைகளின் முன் மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு வேலைகள் அனைத்தும் நாளை மறுதினம் திங்கட் கிழமைக்கு முன்னர் அகற்றப்பட வேண்டும் என யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

மேலும் குறித்த வீதியின் நடுவில் வாகனத் தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே வாகனங்கள் நிறுத்தப்படவேண்டும் எனவும் பாதசாரிகள் வாகன விபத்துகளிலிருந்து தம்மை பாதுகாக்கும் முகமாக நடைபாதையை பயன்படுத்துவதுடன் வீதியை கடப்பதற்கு மஞ்சள் கோடிடப்பட்ட பாதசாரிகள் கடவையை பயன்படுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.(அ-5)



நன்றி: மிரர்

# யங்ஹென்றிஸ், டயமன்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு தெரிவு

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் யாழ்.மாவட்ட ரீதியான 32 கழகங்கள் பங்கு பற்றும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இடம்பெற்ற இரு ஆட்டங்களில் வதிரி டயமன்ஸ், இளவாலை யங்ஹென்றிஸ் ஆகிய அணிகள் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகின.

முதலாவது போட்டியில், கற்கோவளம் உதயதாரகை அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 10:0 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி வெற்றியீட்டியது.

இவ் அணியின் சார்பாக பிறேம்குமார்-4, அரவிந்-3, லக்கீஷன் -2, நளினிகாந்-1 ஆகிய கோல்களை பெற்றுக்கொடுத்தனர்.

இரண்டாவது போட்டியில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது

இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் ஞானரூபன்-3, மகிபன்-2 ஆகிய கோல்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இமையாணன் மத்திய அணிக்காக றாம்கி-ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார். (அ-9-24)

# யாழ்ப்பாணத்தில் 290 ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது 290 ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை இடம்பெற்று வருவதாகவும் இது அடுத்த ஆண்டில் 340 ஏக்கர் நிலப்பரப்பிற்கு விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்டத்தின் விரிவாக்கற் பிரிவு பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறீ பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

ஆரம்ப காலங்களில் 625 ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை இடம்பெற்ற போதும் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் மாட்டெரு மற்றும் உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளல், திராட்சை பழங்களை சந்தைப்படுத்தல் போன்றவற்றில் ஏற்பட்ட சிக்கலால் இச் செய்கை 140 ஏக்கர் நிலப்பரப்பிற்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் விவசாயத் திணைக்களத்தால் 238 பயனாளிகளுக்கு 55 ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை மேற்கொள்வதற்கான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டதன் மூலம் மேலும் செய்கை நிலப்பரப்பு விஸ்தரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உரும்பிராய், புத்தூர் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் கூடிய விஸ்தீரணத்திலும் வேலணை, கைதடி மற்றும் கரவெட்டி விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் குறைந்தளவு விஸ்தீரணத்திலும் மேற்படி செய்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக' வும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்ட திராட்சை செய்கை குறித்து பத்திரிகைகளில் தவறான தரவுகளுடன் செய்திகள் அண்மையில் வெளி வந்துள்ளதாக குறிப்பிட்டார். (அ-5)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)


தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வேலணை பிரதேசசபைக்குட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் மேற்படி நூலகங்களின் எல்லைக் குட்பட்ட பாடசாலை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் குறித்த விபரங்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்படி மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபரூடாக எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறித்த பொதுநூலகங்களுக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டுமென வேலணை பிரதேச சபையின் நூலகர் ச.வித்யா அறிவித்துள்ளார். (அ-5)




# தேசிய மட்டத்திற்கு தெரிவாகினர்





வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியில் தரம் -10 இல் கல்வி பயிலும் இரு மாணவிகள் தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

வடமாகாண கலை, கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட கவிதை பாடல் போட்டியில் சிவகுமார் சங்கவி என்ற மாணவியும் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற கூட்டுறவு தினப் போட்டியில் வதனரூபன் மாதுமை வெற்றிபெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். (அ-9-24)

# கரவெட்டி ச.ச.நிலையங்களின் சமாசத் தெரிவு டிசெம்பரில்

(கரணவாய்)

கரவெட்டி சனசமூக நிலையங்களின் சமாசத்தின் புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறும் எனவும் அதற்கு முன்னர் அனைத்து சனசமூக நிலையங்களும் அங்கத்துவமாக சமாசத்தில் இணைய வேண்டுமெனவும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சபையினருக்கும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூகங்களுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது சில உறுப்பினர்களினால் சனசமூக சமாசத்தின் நிர்வாகத் தின்னை புதிதாக தெரியுமாறு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதையடுத்தே பிரதேச சபையினரால் மேற்படித் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

கரவெட்டி சனசமூகங்களின் சமாசத்தில், 16 சனசமூகங்கள் மட்டுமே அங்கத்துவம் வகிக்கின்றன.

ஏனைய 71 சனசமூக நிலையங்கள் அங்கத்துவம் பெறவில்லை. இந்நிலையில் சகல சனசமூக நிலையங்களையும் 100 ரூபாவை அங்கத்துவப் பணமாக செலுத்தி, சமாசத்தில் இணையுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-60)

## தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்



தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் உலககுடியிருப்பு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வடமராட்சி வட.இந்து மகளிர் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி கற்கும் வேணுகோபால் யதீஸ்வரியா தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பணப்பரிசும் வெற்றிச் சான்றிதழும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது. இம்மாணவி பொது நலவாய கட்டுரைப் போட்டியில் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-24)

# வெள்ளி, ஞாயிறு தினங்களில் கல்வி நடவடிக்கைக்கு தடை

## கரவெட்டி பிரதேச சபை தீர்மானம்

(கரணவாய்)

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட சகல தனியார் கல்வி நிலையங்களும் மாணவர்களின் நலன் கருதி வெள்ளிக் கிழமைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வகுப்புக்களை நடத்தக் கூடாது என கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை அறிவித்துள்ளது.

இதற்கமைய மாணவர்கள் அறநெறி வகுப்புக்களுக்கும், ஆலய வழிபாட்டிற்கும் செல்வதற்கு ஏதுவாகவே வெள்ளிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புக்களை நடத்தக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபையினருக்கும் கரவெட்டி சனசமூக நிலையத்தினருக்குமிடையே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குறித்த தீர்மானத்தை சபையின் தவிசாளர் எஸ். வியாகேசு அறிவித்தார்.

மாணவர்களை ஆன்மீக வாழ்வில் வளர்த்தெடுக்கும் நோக்கிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை சுட்டிக்கட்டத்தக்கது. (அ-9-60)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி

அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கிடையில் நடத்தப் படவுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்

## நடாத்தும்

# நவராத்திரி விழா-2013

**இடம்:**- நிலைய முன்றல்
**காலம்:**-12.10.2013 சனிக்கிழமை
**நேரம்:**- மாலை 6.30 மணி

**தலைவர்**
**திரு.C.G. திருமாலழகன்** (நிலையத் தலைவர்)

**பிரதம விருந்தினர்**
**திருமதி. இரஞ்சிதம் குட்டித்தம்பி**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்- வடமராட்சி)

**சிறப்பு விருந்தினர்கள்**
**திருமதி .A.J. சாந்தவதனி**
(சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்)
**திரு.S. அசோகன்**
(கிராம உத்தியோகத்தர், கரணவாய் கிழக்கு)

**ஆசியுரை**
**திரு.V. செவ்வந்திநாதக் குருக்கள்**
(ஆசிரியர், உடுப்பிட்டி அ.த.க.பாடசாலை)

✷ **சிறுவர் நிகழ்வும், பரிசில் வழங்கலும்**
**-இடைவேளை-**

**கலை நிகழ்வுகள்**
✷ கலைவாரிதி செல்வி. பேரின்பநாயகி அவர்களின் குரு ஷேஸ்திர மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வுகள்:
1.கணேசர் ஸ்துதி
செல்வி. விதுர்ஷிகா ரவிப்பிரகாஷ்
2. ஜதீஸ்வரம்
செல்வி. காதம்பரி கிருஸ்ணதாசன்
✷ **சிறப்பு நகைச் சுவை நிகழ்ச்சி**
வழங்குபவர்:- மா.சின்னராசா (மாசி)
✷ **வழக்காடு மன்றம்**
**''குற்றவாளிக் கூண்டில் இன்றைய் சமுதாயம்''**
நடுவர்: கரவை சிவஞானம் பாலமுரளி (ஆசிரியர்)

**குற்றங்கள்**
1. தற்கால தரக்குறைவான பாடல்கள்
2. வெளிநாட்டு கலாசார வருகை
3. தொடர் நாடகங்களில் காலம் கழித்தல்

| **குற்றம் சுமத்துபவர்கள்** | **குற்றத்தை எதிர்ப்போர்** |
|---|---|
| செல்வன் S.கங்காதரன் | செல்வன் K.அருள்குமரன் |
| செல்வன் M.மனுசங்கர் | செல்வன் S. பரம்நாத் |
| செல்வன் K. சிந்துஜன் | செல்வன் S. ஸ்ரீகிருஸ்ணா |

**விசேட கலை நிகழ்வு**
✷ யாழ். முன்னணி இசைக் கலைஞர்களுடன் எமது பாடகர்களும் இணைந்து வழங்கும்
**"கரவை கானங்கள்"**
இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**நிர்வாகத்தினர்.**

# இலங்கை அமைச்சரவை கின்னஸ் சாதனை

(கொழும்பு)

உலகில் மிகப் பெரிய அமைச்சரவையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவையை கின்னஸ் சாதனை புத்தகம் தெரிவு செய்துள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பதவியேற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவையில் 52 பேர் இடம்பெற்றனர்.

இதன்பின்னர் பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதுடன் அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்தது.

கின்னஸ் சாதனை புத்தகத்தின் இணையத் தளம் இந்த தகவலை வெளியிட்டுள்ள நிலையில் மேலும் புதிய பிரதியமைச்சர்கள் பலர் பதவியேற்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

# விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் இணைய வழி வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறிக்கு நான்காவது அணிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அதன் இணைப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய முடிவுத் திகதி நேற்றிலிருந்து எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம் தரம் 6 அனுமதி-2014


யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டு தரம் 6 இல் English Medium/ தமிழ்மொழிமூல வகுப்புக்களுக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 30.10.2013**

குறிப்பு:-
✦ தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் 13.10.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. அனுமதி இலவ சம்.
✦ புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசிற் பண உதவி பழைய மாணவர்களினால் வழங்கப்படும். மேலதிக விபரம் அதிபர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அதிபர்**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,**
**சுன்னாகம்.**
(சி/5140)

# நவராத்திரி பாமாலை



## கல்விச்செல்வம் தரும் சரஸ்வதி

தாமரை மீது அமர்ந்தவளே
தண்மை அளிப்பவளே
வீணை கொண்டவளே
வினைகள் அறுப்பவளே
முடி அணிந்தவளே
முன்னேற்றம் அளிப்பவளே
கல்வி தருபவளே
காத்திடுவீர் எம்மை போற்றுகின்றோம்

**தி. மித்திரன் 9A**
**யா/சுழிபுரம் விக்டோறியா கல்லூரி**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது அன்புச் செல்வங்களான**







*யா/ தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்வன் இராஜசேகர் விதூஷன் 162 புள்ளி (அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்)*

*யா/ பரு.சித்தி விநாயகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் 180 புள்ளி (மாவட்ட நிலை 80)*

**ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களது வெற்றிக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**ஓடக்கரை, பருத்தித்துறை.** (சி/5149) **வாழ்த்துவோர்: பெரியம்மா, அக்கா, அண்ணா.**

# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 11.75
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc (Hons) பொறியியலாளர் கணனிப் பொறியியலாளர் (தனியார்)
தொ.இ:B810

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா. 50.75 12 இல் செவ்.
உயரம்: 5"7"
தகைமை/ தொழில்: A/L பிரான்ஸ் (10 வருட விசா வழங்கப்பட்டுள்ளது)
தொ.இ:B812

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம் 3
உயரம்: 25
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: HND QS (கணனி விரிவுரையாளர்)
தொ.இ:B813

பிறப்பு: 1962
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா:48.75 சூரி. செவ். 11
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L (கனடா PR) (விவாகரத்தானவர்)
தொ.இ:B815

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா :54.5 செவ். 7
தகைமை/தொழில்:A/L
தொ.இ:G1059

பிறப்பு: 1982 இந்து (Mu)
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா :16.25
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDA, AAT Accounts Clerk
தொ.இ:G1063

பிறப்பு: 1966 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா :21.5 செவ்.சூரி. 10
தகைமை/தொழில்: A/L சித்த மருத்துவபீடம் (சித்த ஆயுர்வேத வைத்தியம்
தொ.இ:G1077

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா :61, 1 இல் செவ்.
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G1094

**சகல தொடர்புகளுக்கும்:-**

# கல்யாண மாலை

**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி அம்மன் ஆலயத்தில் திருட்டு

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கண்ணகிநகர் கிராமத்தில் உள்ள கண்ணகி அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு தங்கச் சங்கிலி, பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, ஆலயத்தை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் விக்கிரகங்களில் இருந்த தங்கச் சங்கிலியையும் உண்டியலை உடைந்து பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-264)

## வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் அளம்பில் பலநோக்கு கூட்டுறவு சங்கம்

(முல்லைத்தீவு)

**அளம்பில் பல நோக்கு கூட்டுறவு சங்கம் பல்வேறுபட்ட வளப்பற்றாக்குறைகளுடன் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள அளம்பில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் இப் பலநோக்கு கூட்டுறவு சங்கம் இயங்கி வருகின்றது.

இங்கு கிணறு இல்லாமையால் குடிநீரை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மலசலகூட வசதியும் இங்கில்லை. சுற்று வேலி அமைக்கப்படாமையால் கால் நடைகள் அசுத்தம் செய்கின்றன. மின்சாரம் வழங்கப்படாமையால் மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன.

இப் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தால் அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு கிராமங்களை சேர்ந்த 460 குடும்பங்கள் பயன்பெறுகின்றன. உரியவர்களிடம் இது தொடர்பாக முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)

## வவுனியாவில் மூன்று நாட்கள் மாநாடு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் மூன்று நாட்கள் மாநாடொன்றினை யெகோவாவின் சாட்சியங்கள் ஏற்பாடு செய்துள்ளது.

இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பொது நிகழ்ச்சி ஒன்றில் **பதில்களை தெரிந்து கொள்ளுங்கள்** எனும் தொனிப் பொருளில் முதலாம நாள் **சத்தியத்தின் தூணும் ஆதாரமுமான கடவுளுடைய சபையும்** எனும் கருத்தில் பேச்சும **கடவுளின் அதிசய செயல்களை தியானித்து பாருங்கள** எனும் நாடகமும் இரண்டாம் நாள் தொடர்ந்து **சத்தியத்தில் நடந்திடுங்கள** எனும் ஞானஸ்தான பேச்சும் இறுதிநாளான மூன்றாம் நாள் **சத்தியம் என்பது என்ன** எனும் பொதுப்பேச்சும், **துன்பங்களை சந்திக்க உங்கள் இதயங்களை தயார்ப் படுத்துங்கள** எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. (ம-266)

## வீடுகளை நிர்மாணிப்பதற்கு கல், மண் பெறுவதில் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய கிராமங்களில் உள்ள குடும்பங்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு கல், மண் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த 1984ஆம் ஆண்டு அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்டு 26, 27, 28 வருடங்களின் பின் 2010, 2011, 2012 ஆண்டுகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 76 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 86 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக்குடும்பங்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு கல், மண் இல்லாது அவதியுறுகின்றனர்.

கொக்குத்தொடுவாய் கிராமத்தில் கருங்கல் மலை இருக்கின்றது. இக்கருங்கல் முல்லை மாவட்ட மக்கள் அனைவரும் வீடு கட்டுவதற்கு போதுமானது. ஆற்றுமண் உண்டு. இம் மண் மேற்குறித்த ஆறுகிராம சேவையாளர் பிரிவு மக்களும் வீடு கட்டுவதற்கு போதுமானது.

ஆனால் வெலிஓயா இராணுவம் இம் மண், கல் என்பவற்றை வீட்டுத்திட்டத்திற்கு எடுப்பதற்கு அனுமதி வழங்கவில்லை.


இந்த மண்,கல் இராணுவத்தின் தேவைக்கும் வெலிஓயாவில் உள்ள சிங்கள மக்கள் வீட்டுத்திட்டம் அமைப்பதற்கும் இலவசமாக பயன்படுத்தப்படுகின்றது.

மேற்குறித்த கிராம மக்கள் 30கி.மீ தூரத்தில் உள்ள குமுழமுனை பிரதேசத்தில் இருந்தே வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய கல், மண் என்பவற்றை அதிக பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதற்கான தீர்வை பெற்றுத்தர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர் (ம-267)




## வீதி விளக்குகள் ஒளிரவில்லை



(கிளிநொச்சி)

கரடிப்போக்கு சந்தியில் இருந்து கிளிநொச்சி நீதிமன்றம் வரை வீதி விளக்குகள் ஒளிராமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த ஒரு வாரமாக மேற்குறித்த இடத்தில் உள்ள வீதி விளக்குகள் ஒளிராமையால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவலநிலை உள்ளது.

எனவே உரியதரப்பினர் உடன்நடவடிக்கை எடுத்து வீதி விளக்குகளை ஒளிர வைத்து விபத்துக்களை குறைக்க ஆவன செய்யுமாறு பயணிகள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம)

## ஏடு தொடக்கும் நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நாளை மறுதினம் விஜய தசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளதாக சங்கத்தின் துணை செயலாளர் சி. நாகராசா தெரிவித்தார்.

இதேவேளை சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இடம்பெற்று வரும் நவராத்திரி விழாவின் போது பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதாக தெரிவித்தார்.

நாளை மாலை 5 மணிக்கு திருமதி சூரியாழினி வீரசிங்கத்தின் நிருத்திய நிகேதன மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-266)

## கரைதுறைப்பற்றில் அதிகரிக்கும் திருட்டுக்கள்

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள வற்றாப்பளை, முள்ளியவளை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


குறிப்பாக ஒரே நாளில் பல வீடுகளில் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அதிலும் அரச ஊழியர்களின் வீடுகளை இனம் கண்டே இத்திருட்டு சம்பவங்கள் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் வற்றாப்பளை சமுர்த்தி முகாமையாளரின் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் 2 பவுண் நகை மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை அபகரித்து சென்றுள்ளனர்.

இவ்வாறு அதிகரித்துள்ள திருட்டு சம்பவங்களால் அப்பகுதி மக்கள் இரவு நேரங்களில் விழித்திருக்க வேண்டிய அவலநிலை உள்ளது.

இவ்விடயத்தில் உரிய தரப்பினர் அக்கறை எடுக்காது இருப்பது ஏன்? என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே மேற்குறித்த இடங்களில் இடம் பெறுகின்ற திருட்டுச் சம்பவங்களை தடுத்து நிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)





கனகபுரம் றோயல் முன்பள்ளியின் ஆசிரியர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநலவாய மாநாட்டில்

# கமரூன் பங்கேற்பது குறித்து பிரிட்டன் எம்.பிக்கள் சிலர் கவலை

(லண்டன்)

**கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்பது தொடர்பில் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவலை வெளியிட்டுள்ளதாக த ரெலிக்கிராப்ட் தெரிவித்துள்ளது.**

பிரித்தானியாவின் வெளிவிவகார தெரிவுக்குழு அடுத்த வாரம் வெளியிடவுள்ள மனிதவுரிமைகள் தொடர்பான அறிக்கையில், கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் டேவிட் கமரூன் பங்கேற்பது தொடர்பிலான விடயமும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் பங்கேற்பது தொடர்பிலான தமது கவலைகளை வெளிவிவகார தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்தவுள்ளனர்.

ஆயினும் இவ்விடயத்தை பிரித்தானிய வெளிவிவகார தெரிவுக்குழுவின் மனிதவுரிமைகள் நிலவரம் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்குவதா என்பது தொடர்பில் இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை, இம்மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் கலந்து கொள்ளாதுவிடில் அது பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது என அந்நாட்டின் வெளிவிவகார தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றனர்.

2011ஆம் ஆண்டு நத்தார் தினமன்று பிரித்தானியாவைச் சேர்ந்த 32 வயதான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர் குறும் சேய்க் தங்காலையில் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் தொழிற் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர சிமோன் டன்சுக் நேற்று டேவிட் கமரூனிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரித்தானியப் பிரதமர், பொதுநலவாய அமைப்பில் மிகப் பெரிய நம்பிக்கை வைத்துள்ளவர்கள் என்ற வகையில் பிரித்தானிய பிரதமராகிய நான் இம்மாநாட்டில் கலந்து கொள்வது சரியானதாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

இலங்கையில் இடம்பெறும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து நாம் மகிழ்ச்சி கொள்ளவில்லை. ஆயினும் கொழும்பு மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம், இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பதிலளிக்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை எம்மால் கொடுக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

குறும் சேய்க்கின் படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கையின் மனிதவுரிமை நிலைமை தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்புவதாக, கமரூன் முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார்.

இலங்கையில் போர் இடம்பெற்ற காலப் பகுதியிலும், அதன் பின்னரான காலப்பகுதியிலும் அங்கு மனிதவுரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக சர்வதேச சமூகம் குற்றம் சுமத்தி வருகிறது. பொதுநலவாய அமைப்பால் இலங்கைக்கு வழங்கும் நிதியை இடைநிறுத்த வேண்டும் எனவும் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கவுள்ளதாகவும கனேடியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது அதிகரித்து வரும் தாக்குதல்கள், வன்முறைகள் மற்றும் பாலியல் சித்திரவதைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக த ரெலிக்கிராப்ட் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# யாழிலிருந்து 1300 கி.மீ தூரத்தில் தாழமுக்கம்

## இலங்கைக்குப் பாதிப்பில்லை

யாழ்ப்பாணத்திலிருந்து வட கிழக்காக ஆயிரத்து 300 கிலோமீற்றர் தொலைவில் வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த பயளின் எனும் சூறாவளி தீவிரமடைந்து வருகின்றது. இதனால் இலங்கைக்கு எவ்வித நேரடிப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லையென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயளின் எனும் சூறாவளி இந்தியாவை நோக்கி நகருவதனால் இலங்கைக்கு நேரடி பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பில்லையெனக் கூறிய அவர் அதன் மறைமுக தாக்கமாக நாட்டின் பல பாகங்களிலும் கடும் மழை மற்றும் பலத்த காற்றினை எதிர்பார்க்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரமடைந்து வரும் குறித்த சூறாவளியின் மையத்தைச் சுற்றி மணித்தியாலத்துக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் கடுங்காற்று வீசி வருகின்றமையால் தூரம் அதிகரிக்க காற்றின் வேகம் பாரதூரமாக அமையாதென திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பயளின் சூறாவளியின் விளைவாக நாட்டின் வடக்கு, வடமேல், மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் தென்மாகாணங்களில் அவ்வவ் போது 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யக் கூடும்.

அதேநேரம் கிழக்கு மாகாணத்தில் மாலை அல்லது பிற்பகல் வேளைகளில் இடியுடன் அதிக மழைபெய்யுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டிற்குள்ளும் கடலிலும் ஓரளவு அதிக காற்றினை எதிர்பார்க்கலாமெனவும் அவர் கூறினார்.

கடலில் புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக் கூடாக திருகோணமலை வரையிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடல் பிரதேசமும் அவ்வவ்போது கொந்தளிப்புடன் காணப்படும். கடலில் காற்று மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

## பொலிஸ்மா அதிபர் இராணுவத்தை அழைக்கவில்லை- பொலிஸ் ஊடகப் பிரிவு

வெலிவேரியாவில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கு பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கு அமைய இராணுவம் செல்லவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிராந்தியத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கைக்கு அமைய அங்கு இராணுவம் சென்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ரத்துபஸ்வல கிராம மக்கள் குடிநீர் கோரி வெலிவேரிய பிரதேசத்தில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது அங்கு இராணுவம் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலந்து செல்லுமாறு பணித்தது.

எனினும் சில நேரத்துக்கு பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இந்தச் சம்பவத்தில் மூன்று பேர் பலியாகினர்.

சம்பவம் தொடர்பாக இடம்பெற்று வரும் வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த கம்பஹா பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ்மா அதிபரே இராணுவத்தை சம்பவ இடத்துக்கு அழைத்திருந்ததாக தெரிவித்திருந்தார். (அ-2)

## சர்வதேச சிறுவர் முதியோர் தினம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தினரால் சர்வதேச சிறுவர் முதியோர் மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராய், கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி எஸ். நற்குணலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக வதிரி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்ல உபதலைவர் எஸ்.என். க்திரவேலு, பிறண்ஸ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் செல்வி கே. இராஜஸ்வரி, நல்லொழுக்க நிறுவனதலைவர் பா.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு இத்தினத்தை முன்னிட்டு கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ-9-60)




**மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் யாழ்.மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்ட ஆரம்பவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுபச்செல்வன் உள்ளிட்ட விருந்தினர்கள் வதிரி டைமன்ஸ் அணி வீரர்களுக்கு கைலாகு கொடுத்து அறிமுகம் செய்வதை படத்தில் காணலாம்.**

**(படம்:- எஸ்.செல்வதீபன்)**

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங் களை பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை**

சிவநேசன் மயூரேன்-169, ஜெயகாந்தன் கோபிதரன்-161, கிரிதாசன் திருமகள்-157, ஜெகதீஸ்வரன் டன்சிகா- 155, பற்பநாதன் வதூர்சன்-153

**யா/தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்**

சிவாஸ்கரன் லக்சிகா-158, நீலவண்ணன் அனிற்றன்-162, முருகையா சிவதாரணி-158, சுந்தரராசா கார்த்திகன்-155

**யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை**

பத்மநேசன் கஜானன்-167, திருலிங்கநாதன் காயத்திரி-160

**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**

மு.சுஜானி-180, இ.தீபிகா-178, பு.லக்ஷன்-172, ஜெ.சோபிகா-162, க.பிரியங்கன்-160, கு.திவியா-155.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

601

## சிறுவனின் வியத்தகு அறிவு

"...அடுத்த இரண்டாவது கேள்வியால் சிறுவனை மடக்க அரசன் எண்ணினான்.

அது போகட்டும். ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்கள் எத்தனை என்று உன்னால் கணக்கிட்டுக் கூற முடியுமா? என்று கேட்டான்.

உடனே ஒரு குண்டுசியும் காகிதமும் வேண்டுமென்று அரசனிடம் கேட்டான் சிறுவன். அவைகள் கொடுக்கப்பட்டன. உடனே அவன் குண்டுசியால் காகிதம் முழுவதிலும் மிகவும் நெருக்கமாகத் துளைகள் போட்டு அதனை அரசனிடம் கொடுத்தான்.


அரசே! இந்தக் காகிதத்தில் உள்ள துளைகள் எண்ணிக்கையே வானிலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையாகும் என்றான் சிறுவன்.

அரசன் சிறுவன் கொடுத்த காகிகதத்தை உற்றுநோக்கினான். காகிதம் முழுவதும் கல்லடைக் கண்களாக இருந்தன. அவற்றை எண்ணிப் பார்க்க முடியாமல் திகைத்தான். நட்சத்திர எண்ணிக்கையையும் காகிதத்தின் துளைகளையும் எண்ணி சரிபார்ப்பது எப்படி? அது இயலாது என்பதால் சிறுவனின் பதிலை ஏற்றுக் கொண்டு அவனைப் பாராட்டினான்.

கடைசியாக மூன்றாவது கேள்வியையும் சிறுவனிடம் அரசன் கேட்டான்.

சிறுவனே! படைப்புப் பொருளின் ஆயுட் காலத்தில் எத்தனை விநாடிகள் உள்ளன என உன்னால் கூற முடியுமா?

முடியும். அரசே! நமது நகரின் கிழ்க் கோடியில் ஒரு மலை உள்ளதல்லவா? அது ஒரு கல் உயரம். ஒரு கல் நீளம். ஒரு கல் அகலம் உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு பொன்னுலகப் பறவை அந்த மலையின் கற்பாறை மேல் தன் அலகைத் தீட்டிக்கொண்டு செல்கிறது. இவ்வாறு அப்பறவை தீட்டுவதால் சிறுகச் சிறுக மலையிலுள்ள கற்பாறை தேய்ந்து கொண்டே இருக்கிறது. எப்போது அந்த மலை முழுவதும் தேய்ந்து மறைகிறதோ, அப்போதுதான் படைப்புப் பொருளின் ஆயுட்காலம் முடிவடையும். இவ்வுலகின் ஆயுளும் முடிவடையும் என்று கூறி முடித்தான் சிறுவன்.



சிறுவனின் மதிநுட்பம் அரசனை வியக்கச் செய்தது. அன்றுமுதல் சிறுவனைத் தனது சொந்த மகனாகவே பாவித்து பாசமுடன் வளர்த்து, பிற்காலத்தில் அரசன் தனது நாட்டை அறிவாற்றல் மிகுந்த அந்தச் சிறுவனிடமே ஒப்படைத்தான். (முற்றும்)

******* ******* ******* *******

## ஒற்றுமையின் பலம்

ஒரு பெரியவருக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அந்த நான்கு பேரும் எப்போதும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். அவர்களுக்குள் ஒற்றுமை என்பதே கிடையாது.

இதைப் பார்த்த பெரியவர் மிகவும் வருத்தமடைந்தார். தன் நான்கு மகன்களையும் பெரியவர் கூப்பிட்டார்.

"நீங்கள் நான்கு பேரும் எப்பவும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். உங்களுக்குள்ளே எந்த சண்டையும் வரக்கூடாது. அப்போதுதான் நீங்கள் சந்தோஷமாக வாழ முடியும்" என்று கூறினார்.

ஆனால், இதை நான்கு மகன்மாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கம் போல சண்டை போட்டுக்கொண்டே இருந்தார்கள்.

ஒரு சமயம் பெரியவருக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அவர் தன்னுடைய மகன்களுக்கு ஒற்றுமையின் சக்தியை புரிய வைக்க வேண்டும் என விரும்பினார். தன்னுடைய மகன்களைக் கூப்பிட்டு "நீங்கள் நான்கு பேரும் ஆளுக்கொரு கொம்பைக் கொண்டு வாருங்கள்" என்றார்

நான்கு மகன்களும் ஆளுக்கு ஒரு கொம்பைக் கொண்டு வந்தார்கள். பெரியவர் முதல் மகனை அழைத்து அந்த நான்கு கொம்புகளையும் ஒன்றாய் வைத்து ஒரு கயிற்றால் கட்டச் சொன்னார். முதல் மகனும் அவ்வாறே செய்தான்.

"இப்ப நீ இதை உடை பார்க்கலாம்" என்றார்.



(தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492-கொலம்பஸ் கரிபியனில் பஹாமாசை அடைந்தார். அவர் கிழக்காசியாவைத்தான் அடைந்ததாக எண்ணினார்.
- 1785- ரிச்சார்ட் ஜான்சன் என்பவர் தமிழ்நாட்டின் முதல் செய்திப்பத்திரிகையான மெட்ராஸ் கூரியர் என்ற வார இதழை வெளியிட்டார்.
- 1798- இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுநராக ஆக்கப்பட்டார்.
- 1915- முதலாம் உலகப்போர்: கூட்டுப்படைகளை பெல்ஜியத்தில் இருந்து தப்ப உதவியமைக்காக பிரித்தானியத் தாதி எடித் கவெல் என்பவர் ஜேர்மனியர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டார்.
- 1941- உக்ரேனின் தினிபுரோபெத்ரோவ்ஸ்க் நகரில் இந்நாளிலும் இதற்கு அடுத்த நாளிலும் நாசி ஜெர்மனயினர் 11 ஆயிரம் யூதர்களைக் கொன்றனர்.
- 1964- சோவியத் ஒன்றியம் வஸ்கோத் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது. இதுவே பல விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்ற முதலாவது கப்பலாகும்.
- 1976- மறைந்த மாசே துங்கின் இடத்திற்கு ஹுவா குவோஃபெங்க் என்பவரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக நியமிப்பதாக மக்கள் சீனக் குடியரசு அறிவித்தது.
- 1984- ஐ.ஆர்.ஏ குண்டுவெடிப்பில் இருந்து மார்கரெட் தாட்சர் காயமெதுவும் அடையாமல் உயிர் தப்பினார்.
- 1994- மகெலன் விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்தை அடைந்ததை அடுத்து அதனுடனான தொடர்புகளை நாசா இழந்தது. இது அடுத்தடுத்த நாட்களில் எரிந்து சேதமடைந்தது.
- 1999- பாகிஸ்தானில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியில் பெர்வேஸ் முஷாரஃப் நவாஸ் ஷெரீப்பை ஆட்சியில் இருந்து அகற்றி நாட்டின் ஜனாதிபதியானார்.
- 1999- உலகின் மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.
- 2001- அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.
- 2005 - சீனாவின் இரண்டாவது ஆட்களுடன் கூடிய விண்கலம் சென்ஷோ 6- இரண்டு விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1891- ச. வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (இ.1956)
- 1921- ஆர்ட் குலொக்கி, களிமண்ணால் செய்யப்படும் இயங்குபடங்களின் முன்னோடி (இ.2010)
- 1918-கே.கே.பிர்லா, இந்தியாவின் தொழிலதிபர் (இ.2008)

### இறப்புக்கள்

- 1605- பேரரசர் அக்பர், முகலாயப்பேரரசின் மன்னர் (பி.1542)
- 1924- அனத்தோலி பிரான்ஸ், பிரெஞ்சு எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1844)
- 1965- போல் ஹேர்மன் முல்லர், சுவிட்சர்லாந்து வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1899)

### ச.வையாபுரிப்பிள்ளை



ச.வையாபுரிப்பிள்ளை இருபதாம் நூற்றாண்டின் முதன்மை தமிழ் ஆராய்ச்சியார்களில் ஒருவர். தமிழ் நூற்பதிப்புத் துறையில் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியவர். தமிழில் சிறந்த புலமை உள்ளவர், ஆய்வுக்கட்டுரையாளர், திறனாய்வாளர், காலமொழி ஆராய்ச்சியாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், கதை, கவிதைகள் புனையும் திறம் படைத்தவர் எனப் பல்முகப் பரிமாணங்களைக் கொண்டவர். சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட பேரகராதியின் ஆக்கக் குழுத் தலைவராகச் செயற்பட்டவர்.

வழக்குரைஞராகப் பணியாற்றி வந்த காலத்தில், உ.வே.சாமிநாதய்யருக்குப் பின்னர் பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்ட பெருமை இவரைச் சாரும்.

இரசிகமணி டி.கே.சியுடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்தவர்.

அவரது வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2 ஆயிரத்து 943 புத்தங்கள். ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளும், ஓலைச் சுவடிகளும் நூற்றுக்கணக்கில் இருந்தன.

மனோன்மணியும் உரையுடன் தொடங்கி 1955 இல் நாலாயில திவ்யப் பிரபந்தத்தை உரையுடன் பதிப்பித்தது வரை தமிழுக்குப் பெரும் தொண்டு ஆற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



## ஆன்மீகம் 05


...முதலில் சக்திநிலை மேம்பர்டு செயலாக வெளிப்படுமா என்கிற கேள்வியைப் பார்க்கலாம். ஆன்மீகப் பயிற்சிகளை, அடிப்படையில் உள்நிலை அறிவியலாக நீங்கள் அணுக வேண்டும். இன்று புறநிலை அறிவியலுக்குத் தரப்படுகிற முக்கியத்துவம் அதிகமாக இருக்கிறது. ஆனால், புறநிலை அறிவியலுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்படுகின்ற சமூகத்தில் பொருளாதாரம் மேம்படுகிறதே தவிர வாழ்க்கை அவ்வளவு சுலபமாக இல்லை.

மனிதர்களின் சுவாசக் காற்றில் கூட விஷத்தைக் கலக்கும் அளவிற்கு, வெளிநிலை அறிவியல் வளர்ச்சி எல்லை தாண்டிப் போய்விட்டது. எனவே, மனிதன் உள்நிலையில் கொண்டு வருகிற வளர்ச்சி இந்த சமூகத்திற்கு செயல்களாக வெளிப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள்.

தனக்கு எது கிடைத்தாலும் அதனை வெளிப்படுத்துவது என்கிற மனநிலை தன்னை மையப்படுத்திக்கொள்கிற ஒரு அகங்காரத்தின் வெளிப்பாடே தவிர, அது ஆன்மீகம் அல்ல. குறிப்பாக, ஆன்மீகப் பாதையில் உண்மையாகவே நடையிடுகிற ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சக்திநிலை உயர உயர சில சக்திகள் கைவரப் பெறுவார்கள். ஒன்று, ஆன்மீகப் பயணத்தின் பாதையிலேயே இது வரலாம். அல்லது சில நல்ல இடங்களில் ஆன்மீகப் பயிற்சியை மேற் கொண்டு பாதியில் கைவிடப்பட்டவருக்கும் இது அரைகுறையாகக் கிடைக்கலாம்.

உடனே, தங்களுக்குக் கிடைத்திருக்கும் இந்த அரைகுறை நிலைகளை வைத்துக்கொண்டு அவற்றைப் பெரிதாக விளம்பரம் செய்ய முற்படுகிறார்கள்.

## வெளிநிலை அறிவியலின் எல்லை தாண்டிய வளர்ச்சி மனிதனின் சுவாசக் காற்றில் கூட விஷக் கலப்பு



ஒரு மனிதன் சக்தி நிலையை மேம்படுத்துவது என்பது தன்னைத்தானே மேம்படுத்துவதற்குத்தானே தவிர, இன்னொரு மனிதரின் எதிர்காலத்தை கணித்துச் செல்வதற்கோ, அவர்களுக்கு ஆலோசனைகள் சொல்வதற்கோ அல்ல.

எல்லைகள் கடந்த ஒரு விடுதலை நோக்கித்தான் ஆத்ம சாதனைகள் தொடங்குகின்றன. சிறிது உள்ளுணர்வு மேம்பட்டவுடனேயே மற்றவர்களிடம் சென்று, திருமணத்திற்கு நாள் குறிப்பது, இங்கே தண்ணீர் இருக்கிறது தோண்டுங்கள் என்று சொல்வது என்றெல்லாம் சிலபேர் செய்தார்கள்.

ஆன்மீகப் பயிற்சி பெறுபவர்கள் இத்தகைய சித்திகளைப் பெற நேர்ந்தால் அவற்றை உள்நிலை நோக்கி திரும்பி விட வேண்டும். தங்கள் சக்தி நிலையை ஒரு கண்காட்சிப்பொருளாக மக்கள் மாறுவதில் பயனில்லை. மற்றவகளால் செய்ய முடியாததை செய்து காட்டுவதற்கு ஆன்மீகம் தேவை இல்லை.

இது பல வகைகளிலும் மனிதர்களை சிறைப்படுத்தி விடும்.

இந்தியா வில் கூட கோயிலுக்குப் போகிற வழியெங்கும் கடைகள் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அந்த கடைகளால் ஈர்க்கப்பட்டால் கடைசியில் கோயிலுக்குள் போக நேரமிருக்காது. இதுவும் இப்படித்தான்.

உள்நிலையிலிருக்கிற இறைத் தன்மையை உணர்வதற்காகச் செல்கிற வழியில் சிலர் வணிக மனப்பான்மையோடு தங்கள் சக்தி நிலைகளை வீணடிக்கத் தொடங்கினால் அவர்களால் தங்களை உணர முடியாது.

எனவே, ஏராளமான செயல்கள் மூலமோ, சித்து வேலைகள் மூலமோ, தங்களை வெளிக்காட்டிக் கொள்கிற பணியை ஆன்மீகப் பாதையில் நடையிடுபவர்கள் பெரும்பாலும் செய்வதில்லை.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# அமெரிக்காவை அலற வைத்த வியட்நாமின் சிங்கம்- கியாப்

ஜெனரல் வோ குயன் கியாப்

**1911 ஆம் ஆண்டு வியட்நாமில் பிறந்த ஜெனரல் வோ குயன் கியாப், கடந்த 04.10.2013 வெள்ளிக்கிழமை அன்று தனது 102-வது வயதில் மரணத்தைத் தழுவிவிட்டார்.**

**அவரது மனைவியும் தந்தையும் சகோதரியும் 1950களில் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களால் சிறையிடப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.**

...இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்களின் தலைமை தளகர்த்தராக பணியாற்றிய ஜெனரல் கியாப்- 1911 ஆம் ஆண்டில் வியட்நாமின் விவசாய குடும்பம் ஒன்றில் பிறந்தவர்.

இளம் வயதிலேயே புரட்சிகர நடவடிக்கைகளுக்காக பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களால் கைது செய்யப்பட்டார். பின்னர் ஹனோய் பல்கலைக்கழகத்தில் அரசியல், பொருளாதாரம் மற்றும் சட்டத் துறைகளில் படித்துக்கொண்டே வரலாற்று ஆசிரியராக பணிபுரிந்தார்.

1939 ஆம் ஆண்டு ஜப்பான் வியட்நாம் மீது போர் தொடுத்த போது ஹோ-சி-மின் தலைமையிலான இந்தோசீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் சீனாவுக்கு இடம்பெயர்ந்தார்.

அவரது மனைவியும் தந்தையும் சகோதரியும் பிரெஞ்சு ஆக்கிரமிப்பு அரசால் சிறையிடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தப்பட்ட கெரில்லாப் போரில் கியாப் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஜப்பானிய சரணடைவுக்குப் பின்னர் 1946 ஆம் ஆண்டு வியட்நாம் ஜனநாயக குடியரசு அறிவிக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெற்றன.

ஆனால், வியட்நாம் மக்களின் விடுதலையை ஏற்றுக்கொள்ளாமல் தனது காலனி ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட வந்தது பிரெஞ்சு ஏகாதி



பத்தியம். அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மீது படை எடுத்தது.

பிரெஞ்சு படைகளுக்கு எதிரான தியன் பியன் பூ தாக்குதலிலும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான பெ[illegible] தாக்குதலிலும் வியட்நாம் மக்கள் [illegible] வெற்றி [illegible] பெற முடிந்தது?

ஒரு பொருளாதார ரீதியில் பின்தங்கிய, பலவீனமான இராணுவத்தைக் கொண்ட நாட்டு மக்கள் தம்மை ஆக்கிரமித்திருக்கும் முதலாளித்துவ பொருளாதாரத்தினால் வலுப்படுத்தப்பட்ட நவீன இராணுவத்தை எதிர்த்து எப்படி தமது சுதந்திரத்தை மீட்க முடிந்தது?

வியட்நாம் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் கோட்பாட்டை வகுத்து நடைமுறைப்படுத்தி வியட்நாம் மக்களின் விடுதலைப் போரை வழி நடத்தினார் ஜெனரல் கியாப்.

### மக்கள் யுத்தம்

யுத்தத்தின் முடிவை தீர்மானிப்பது பொருட்களும் ஆயுதங்களும் இல்லை, மக்கள்தான்.

எதிரியின் இராணுவ, பொருளாதார வலிமைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் தம்முடைய அடிப்படை உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போரா[illegible] மக்களை எதிர்கொண்டு தோற்கடிக்க அது போதாது. ஒரு நாட்டின் மக்கள் தமது சுதந்திரத்திற்காக ஒன்றுபட்டு போராடும் போது அவர்கள் எப்போதும் வெற்றியடைவது உறுதி. உலகின் மிகப்பலமான பொருளாதார, இராணுவ சக்திகூட தமது தேசிய உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடும் மக்களின் எதிர்ப்பை தகர்க்க முடியாது.

“அவ்வாறு ஒரு நாட்டின் மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்கள் யுத்தம் இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார தளங்களில் நடத்தப்படுகிறது. எதிரிகள், ஒரு இராணுவத்தை மட்டும் எதிர்கொள்ளவில்லை. வியட்நாம் மக்கள் அனைவரையும் எதிர்கொண்டனர். யுத்தத்தின் முடிவை தீர்மானிப்பது பொருட்களும் ஆயுதங்களும் இல்லை. மக்கள்தான்” என்றார் ஜெனரல் கியாப். ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான வியட்நாம் மக்களின் போர், நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கியிருந்தது.

“போரில் வெற்றி பெற்றவர்கள் வியட்நாம் மக்கள். அமெரிக்க இராணுவம் தோற்கடிக்கப்பட்டது. வியட்நாம் மக்கள் போரை விரும்பவில்லை. அமைதியை விரும்பினார்கள். அமெரிக்க மக்கள் போரை விரும்பினார்களா? இல்லை. அவர்களும் அமைதியை விரும்பினார்கள். எனவே, எங்கள் வெற்றி வியட்நாம் மக்களின் வெற்றி, அமெரிக்காவில் அமைதியை விரும்பிய மக்களின் வெற்றி” என்றார் ஜெனரல் கியாப்.

என்ன விலை கொடுத்தாவது வியட்நாமை ஆக்கிரமிக்கத்துடித்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள்தான் தோல்வி அடைந்தார்கள். உழைக்கும் மக்களின் விடுதலைக்காக ஏகாதிபத்தியங்களை எதிர்த்து போராடி மண்டியிடச் செய்த தளபதிதான் பெருமைக்குரிய ஜெனரல் கியாப்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிக்குள் மோதலை ஏற்படுத்துவது அரசுதான்

## கயந்த கருணாதிலக்க எம்.பி.கொதிப்பு

(கொழும்பு)


**எதிர்க்கட்சியில் மோதல்களை ஏற்படுத்தி மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் பின் விளைவுகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்திற்குள் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் வெளியில் இருந்து பார்க்கும் போது அது வெளிப்படையாக தெரிவதில்லை. விவசாயிகள் தமது உற்பத்திகளை விற்பனை செய்ய முடியா துள்ளனர். விவசாயிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படுவதில்லை.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அரசாங்கம் இந்த பிரச்சினைகள் எதனையும் தீர்த்து வைக்க முடியாதுள்ளது.



பால்மாவின் விலை நேற்றுமுன்தினம் முதல் அதிகரித்துள்ளது. விரைவில் சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கும்.

சாதாரண மக்களுக்கு சிறிய கரண்டியால் பரிமாறும் அரசாங்கம் தமது அடிவருடிகளுக்கு தேங்காய் சிரட்டையில் பரிமாறுகிறது.

பிரதியமைச்சர் ஒருவர் கசிப்பு உற் பத்திக்கு சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று பேசுகிறார். தென் மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரோ விபச்சாரத்திற்கும் சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று கூறுகிறார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது அரசின் இந்தக் கொள்கைகள் பற்றிய அரசாங்கத்திற்குள் இருக்கும் ஜாதிகஹெல உறுமய போன்ற கட்சிகளின் நிலைப்பாடுகள் என்ன என்பதை அறிந்து கொள்ளவிரும்புகிறோம்.

மஹிந்த சிந்தனையில் அமைச்சரவையின் எண்ணிக்கை 20 ஆக குறைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று உலகில் மிகப் பெரிய அமைச்சரவையான இலங்கை அமைச்சரவை மக்களின் பணத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



உலக அஞ்சல் தினம் கடந்த புதன்கிழமை நயினாதீவு அஞ்சலகத்தில் பொறுப்பு அஞ்சலதிபர் பு.சுகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது நயினாதீவு முன்பள்ளி மாணவர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் அஞ்சலகத்தினால் உண்டியல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட போது...

## தேசிய மட்டத்தில் மூன்றாமிடம்

(மல்லாகம்)

கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்நாடக மன்றம் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடக அணி தேசியத்தில் மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்தம் நடத்தப்பட்டுவருகின்ற நாடகப் போட்டியில் இவ்வாண்டுக்கான தேசிய மட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விடியலின் பாதை நாடகம் வெற்றி பெற்றுக் கொண்டுள்ளதுடன் சிறந்த துணை நடிகனுக்கான தேசிய விருதினையும் பெற்று சாதனை படைத்துள்ளது. (அ-2-21)

## நவராத்திரி விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 இற்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (அ-9-23)

★ ★ ★

(புன்னாலைக்கட்டுவன்)

ஏழாலை கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தின் மணிமண்டபத்தில் விஜயதசமி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது அறநெறி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் சிறுவர்களின் வித்தியாரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-5-78)

## யோகாசன பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஓம் பதஞ்சலி யோககேந்திரா நிலையத்தால் நடத்தப்படும் யோகாசன மற்றும் தளர்வுப் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 6 மணிக்கு நல்லூர் ஸ்ரீவீரகாளி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து முற்பகல் 6 மணி முதல் 7 மணிவரை நடைபெறவுள்ளன. (அ-5)

# ஒற்றுமையை நிலைநாட்டிய பெருமை எமது இராணுவத்தினரையே சாரும்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற 30 வருடகால கொடிய யுத்தத்தினை முறியடித்து இலங்கை முழுவதிலும் ஒற்றுமையை நிலைநாட்டிய பெருமையில் அதிக பங்கு இலங்கை இராணுவத்தையே சேரும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஆர்.எம்.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 64 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு, இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் பாதுகாக்கும் மிக முக்கிய பொறுப்பு இலங்கை இராணுவ வீரர்களுக்கே உள்ளது. எனினும் நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் முப்படைகளும் மக்களுக்கு தேவையற்றவர்களாகிவிட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 30 வருடகாலமாக நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டது. குறிப்பாக, வடக்கு, கிழக்கு மக்கள் பல்வேறு பட்ட இன்னல்களை அனுபவித்தனர். எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அக்கறையும் இலங்கை முப்படைகளினதும் தியாகமும் வடக்கு, கிழக்கு தமிழ்,சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை காப்பாற்றியது என்றார். (அ-2)

## நீதி நூல் மனனப் போட்டி யாழ்.இந்து கல்லூரியில்

வண்ணை -சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ அபிவிருத்திக் கழகத்தினால் நடத்தப்படும் நீதி நூல் மனனப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் முதலாம்,2 ஆம் தர மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளதுடன் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சைகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரையில் அனுமதி அட்டைகள் கிடைக்க பெறாதவர்கள் இன்று யாழ்ப்பாண நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அபிவிருத்திக்கழக உதவிப் பரீட்சைச் செயலர் ச.சிறிகாந்தன் கேட்டுள்ளார். (அ-2)

## ஐ.நா.வின் தோல்வி அறிக்கை விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

இலங்கையின் இறுதிப் போரின் போது ஐக்கிய நாடுகள் சபை தமது கடமைகளில் இருந்து தோல்வி கண்டமை குறித்த ஆராய்வு அறிக்கை விரைவில் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகளின் நிபுணர் ஜோன் ஹிட்டிங் தெரிவித்துள்ளார்.

இறுதிப் போர் காலத்தில் வன்னி மக்களை பாதுகாப்பதில் இருந்து ஐக்கிய நாடுகள் தவறிவிட்டது என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் விசாரணைக்கு உத் தரவிட்ட நில்லயில் ஜோன் பெற்றி என்பவர் விசாரணைகளை நடத்தி ஐக்கிய நாடுகளின் தோல்வியை உறுதி செய்தார்.

இதனையடுத்து பான் கீ மூன் தமது மன்னிப்பையும் கோரியிருந்தார். இந்த நிலையிலேயே ஜோன் பெற்றியின் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் பகிரங்கப்படுத்தப்படவுள்ளது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டுக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழர்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்கள்.




பிரித்தானிய பிரமதரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இதன்போது இனப் படுகொலை புரிந்த இலங்கை அரசு நடத்தும் இம் மாநாட்டை டேவிட் கமரூன் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்கள். குறிப்பிட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பலர் பங்குபற்றியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய இடத்தில்

# முள்ளியவளை பொது நோக்கு மண்டபம் இயங்க நடவடிக்கை எடுங்கள்

(முல்லைத்தீவு)

**முள்ளியவளை வடக்கு 4ஆம் வட்டாரத்தில் போரால் சேதமாக்கப்பட்ட நிலையில் உள்ள பொது நோக்கு மண்டபத்தையே புனரமைத்து தருமாறும் வேறிடத்திற்கு பொது நோக்கு மண்டபத்தை மாற்ற வேண்டாம் எனவும் அப்பகுதி மக்கள் அரச அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.**

முல்லை மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளியவளை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் நாவற்காடு, சஞ்சீவி குடியிருப்பு, முள்ளியவளை வடக்கு, 4ஆம் வட்டாரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த 335 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் போருக்கு முன் முள்ளியவளை வடக்கு 4ஆம் வட்டாரத்தில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் முன்பள்ளி செயற்பாடுகள், கூட்டங்கள், கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

கடந்த 2007 - 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போரினால் இப்பொது நோக்கு மண்டபம் சேதமடைந்து காணப்படுகின்றது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்தும் பொது நோக்கு மண்டபம் புனரமைக்கப்படாமையால் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன.



பல அமைப்புக்கள் 26 இலட்சம் ரூபா நிதியில் இக்கட்டடத்தை புனரமைப்பு செய்வதற்கு முன்வந்த போதும் நாவற்காடு பகுதியில் இப்பொது நோக்கு மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு சிலர் தீர்மானம் எடுத்தமையால் அதற்கு மறுப்பு தெரிவித்தே அப்பகுதி மக்கள் அரச அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

நாவற்காடு பகுதியில் முன்பள்ளி பொது நோக்கு மண்டபம் என்பன உண்டு. இந்நிலையில் அங்கு எதற்கு பொது நோக்கு மண்டபம் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே போரால் சேதமாக்கப்பட்ட இப்பொது நோக்கு மண்டபத்தை புனரமைத்து மரநிழல்களில் கல்வி கற்கும் முன்பள்ளி சிறார்கள் மற்றும் ஏனையோர் பயன்பெற ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து விசாரிக்க புதிய நீதிமன்றம்



(முல்லைத்தீவு)

பயங்கரவாதம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரித்து விளங்குவதற்கு அநுராதபுரத்தில் தனியான புதிய நீதிமன்றம் ஒன்று தொடங்கப்படவுள்ளது.

வடமத்திய மாகாண மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் நிசந்த பந்துல கருணாரட்ணவும், ஹேமா சுவர்ணாதிபதியும் இவ்வழக்குகளை விளங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான நீதிமன்றங்கள் செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




# பகைவனுக்கும் அன்பு காட்டும் பண்பை சிறுவர்களுக்கும் கொடுக்க வேண்டும்

## நீதிபதி மா.கணேசராஜா

(முல்லைத்தீவு)

பகைவனுக்கும் அன்பு காட்டும் பண்பை சிறுவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து அங்கு நடைபெற்ற சிறுவர்தின விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உடல் உள மேம்பாட்டுக்கு நல்லாயன் சிறுவர் இல்லம் ஆற்றி வரும் பணிகளை பாராட்டியதுடன் இயேசுபிரானின் அன்பு வழியில் நல்ல பிரஜைகளாக நாட்டுக் குழைக்கும் நல்லவர்களாக குழந்தைகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

இயேசு தன்னை சிலுவையில் அறைகின்ற போது இவர்கள் தாம் என்ன செய்கின்றோம் என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள். பரமபிதாவே அவர்களை மன்னித்துவிடும் என பிரார்த்தித்தார்.

பகைவனை நேசிக்கும், மன்னிக்கும் பண்பை சிறுவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டுமென நீதிபதி எடுத்துரைத்தார்.

கடந்த காலம் கசப்பாக இருந்தாலும் வருங்காலம் வளமாக இருக்க தாம் இறைவனை பிரார்த்திப்பதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ம)

# பாரம்பரிய வைத்தியர்களின் தரவுகள் பெறப்படுகின்றன

(கிளிநொச்சி)

பாரம்பரிய வைத்தியர்களின் அறிவினைப் பாதுகாக்கும் முகமாக சுதேச வைத்திய அமைச்சு பாரம்பரிய வைத்தியர்களிடம் இருந்து தரவுகளை பெற்று வருகிறது.

இதன் அடிப்படையில் இலங்கையில் பரந் திருந்து வைத்திய தொழில் புரியும் பாரம்பரிய வைத்தியர்களை ஊக்குவித்து அவ்வைத்திய ர்களுக்கு நல்ல பயன்களை ஏற்படுத்துவ தோடு அவர்கள் மூலம் மக்களுக்கும் நலன் கிடைக்க செய்வதே இதன் அடிப்படை நோக்கம்.

தெரிவு செய்யப்படும் வைத்தியர்களைப் பதிவு செய்தல், அவர்களின் அறிவு சிகிச்சை முறை மற்றும் திறமைகளை முன்னெடுத்து செல்லும் முகமாக குருகுல முறையில் மாணவர்களைப் பயிற்றுவித்தல், அவர்களுடைய வைத்திய அறிவை பல்கலைக்கழக கல்வி பயில்வோருக்கும் பெற்றுக் கொடுத்தல், பாரம் பரிய அறிவைப் பாதுகாப்பதற்கு அவர்களு டைய யோசனைகள் மற்றும் ஆலோசனை களை கருத்தில் எடுத்து தேசிய திட்டத்தைத் தயாரித்தல் இவை போன்ற பல ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய வகையிலான தரவுகளை எதிர் வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பாரம்பரிய வைத்தியர்களுக்கு சுதேச வைத்திய அமைச்சினால் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (ம-254)








வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் சிறுவர் மற்றும் முதியோர் தின விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நெடுங்கேணி வலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் காணிகளை மக்களுக்கு மீளவழங்குவதற்கான பொறுப்பு யாரிடம்?

**த சன்டே லீடரில் என்.சத்தியமூர்த்தி**



வடக்கு மாகாண சபையை நிர்வகிப்பதற்கு முதன்முதலாக தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பானது, மாகாணசபைக்கு கூடுதல் அதிகாரத்தை தருமாறு கோரமுடியாத நிலையில் தனது ஆட்சியை அமைக்க வேண்டியுள்ளது.

மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்கள் வழங்கப்படாது; இலங்கையின் மத்திய அரசாங்கமே இது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் என உச்ச நீதிமன்றம் அறிவித்தானது நாட்டில் அரசியல் மீளிணக்கப்பாடு ஏற்படுவதற்குத் தடையாக காணப்படுகின்றது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையின் அரசாங்கத்தை பொறுப்பெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, ஏனைய அரசியல் நிர்வாகத்தைப் போன்று தனது பொறுப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. இது, தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை மிகவும் நேர்த்தியாக செய்துமுடிக்க வேண்டியுள்ளது.

மாகாணசபைகளுக்கு காணி தொடர்பான அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் உச்ச நீதிமன்றம் எடுத்த தீர்மானமானது தவறானது.

13-வது திருத்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு, காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என்கிற தீர்ப்பானது, ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

இலங்கையின் பெரும்பான்மை சிங்கள இனவாத உணர்வைக்கொண்ட விமர்சகர்கள், தமிழ் மக்கள் இலங்கை இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்படுவதாக குற்றம் சாட்டி வருகின்ற போதிலும், இது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆரம்பகட்ட பிரதிபலிப்பைக் காண்பிக்காது, அமைதி காத்து வருவதானது பாராட்டத்தக்கதே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தற்போது வடக்கு மாகாணசபைக்கான அமைச்சுக்களை வழங்குவது தொடர்பாக ஆலோசித்து வருவதில் கவனம் செலுத்துவதாலோ அல்லது முதன்முதலாக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண சபையைக் குழப்பக்கூடாது என்றோ கருதி இவ்வாறான விமர்சனங்களைக் கருத்திலெடுக்காது அமைதி காக்கலாம்.

வடக்கு மாகாணசபையை நிர்வகிக்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசியல் நிர்வாகத்தை மட்டும் கற்றுகொள்ள முடியாது. கூட்டமைப்பானது தற்போதிலிருந்து அரசியல் ரீதியான பொறுப்புக் கூறுதல் மற்றும் வகைகூறுதல் போன்றவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

மாகாணசபை அரசாங்கமானது, சலுகைகளுக்கு அடிபணியாது, சில விடயங்களில் மத்திய . அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு இசைந்து நடக்காது, மக்களின் விருப்பிற்கேற்ப செயற்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் அதிகார ஆட்சி நடைபெறவும் வழிவகுக்கக் கூடாது.

உச்ச நீதிமன்றின் தீர்ப்பானது, தமிழ் மாகாணம் என்பதைக் கவனத்திற் கொள்ளவில்லை. இலங்கை அரசாங்கத்தால் மட்டுமே காணி தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதை, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பானது, உறுதிப்படுத்துகிறது. அரசியல் யா[illegible] காரம் இலங்கையின் [illegible]வேற்று அதிபர், காணி தொடர்பான தீர்மானத்தை தனியொருவராக நின்று முன்வைக்க முடியும். இத்தீர்மானத்தை மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவானது மீள உறுதிப்படுத்தியுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவுக்குத் தலைமை தாங்கும் பிரதம நீதியரசரான மோகன் பீரிஸ், காணி தொடர்பான தீர்மானங்களை இலங்கை அதிபரின் அனுமதியின் பின்னரே வடக்கு மாகாணசபை நிறைவேற்ற முடியும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.


இந்நிலையில், 13-வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் காணி ஆணைக்குழுவே மாகாணங்களுக்கு காணி தொடர்பான நடவடிக்கைகளை நிறைவேற்றும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட காணி தொடர்பான அதிகாரமானது, இலங்கை அதிபராலேயே சிபாரிசு செய்யப்படும் எனவும் நீத்மன்றம் அறிவித்துள்ளது.

காணிதொடர்பான அதிகாரத்தை இலங்கை அதிபர் எப்போது, எவ்வாறு வரையறுப்பார் என்பது இங்கு கேள்விக்குரிய ஒன்றாக காணப்படுகிறது. இது தொடர்பில் காணி ஆணைக்குழுவிடம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. இதில் அரசியல், செல்வாக்குச் செலுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கதே. இந்நிலையில் இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை என்பதும், அரசியற் தீர்வின் ஊடாகவே தீர்க்கப்படமுடியும். இங்கு அரசியற் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இதே வேளையில், இதில் சட்டம், அரசியல் யாப்பு மற்றும் நீதிமன்றங்கள் போன்றன தமது பங்களிப்பை மேற்கொள்கின்றன.

போருக்குப் பின்னான காலப்பதியில், இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போது, காணி அதிகாரங்கள் தொடர்பாக [illegible] மேற்கொள்ளப்படும் எனக் கூறப்பட்டது.

காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட வேண்டும். மாகாணங்களுக்கு காணி அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு இலங்கை ஜனாதிபதி அல்லது இலங்கை அரசாங்கமானது, அரசியல் யாப்பின் பிரகாரம் காணி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டிய தேவையுள்ளது. அதாவது, மாகாணங்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையில் காணிகள் பிரிக்கப்பட வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

எந்தவொரு நாட்டிலும் காணி தொடர்பான தீர்மானத்தை, அந்த நாட்டின் அதிபர் அல்லது நாட்டின் தலைவர் முடிவெடுக்க முடியும். ஆனால், இலங்கையில் நாட்டின் தலைவரே அரசாங்கத்தின் தலைவராகவும் காணப்படுகிறார். இவரே அரசியற் கட்சியின் அல்லது ஆளும் கூட்டணியின் தலைவராகவும் காணப்படுகிறார். இந்நிலையில் அதிபருக்கு என ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பாகப் புரிந்துகொள்வதில் குழப்பம் ஏற்படுகிறது. இந்த அதிகாரங்கள் தொடர்பாக இலங்கையின் உச்ச நீதிமன்றம் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.



மூன்று பத்தாண்டுகளாக யுத்தமும் வன்முறையும் இடம்பெற்ற வடக்கு மாகாணத்தின் பொது நிர்வாகத்தை இலங்கை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கிழ் வைத்திருந்தது. இங்குள்ள பெரும்பாலான நிலங்கள் இலங்கை அரசாங் கத்தால் கையகப்படுத்தப்பட்டன. இந்த நிலங்கள் காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப் படவேண்டும். இலங்கையின் ஏனைய மாகாணங்களில் இந்த நிலை வேறுபட்டுள்ளது.

இவ்வாறு காணியற்றவர்களுக்கு நிலங்களை வழங்குவதற்கு முன்னர் 13- வது திருத்தச்சட்டத்தின் கீழ் காணி ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும். ஆனால், இது ஒரு அரசியல் பிரச்சினையாக காணப்படுகிறது. இலங்கையின் மத்தியில் ஆளும் கட்சியா அல்லது தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசாங்கமா இந்தக் காணிகளை வழங்குவது என்பது கேள்விக்குரியதாக உள்ளது. தமிழர்களல்லாத மாகாணங்களில், மத்திய அரசாங்கத்தின் ஆளும் கூட்டணியானது, மாகாண சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஆனால், தமிழர் வாழும் வடக்கு மாகாணத்தின் நிர்வாகமானது கூட்டமைப்பின் கைகளில் உள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை மக்களுக்கு மீளவழங்குவதற்கான பொறுப்பை யாரிடம் கையளிப்பது என்கிற கேள்வி முடிவின்றி இன்னமும் தொடர்கிறது. இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தம்மை யார் ஆளவேண்டும் என்பதை வடக்கு மாகாண சபைத் தேர்தலின் மூலம் நிரூபித்துள்ள நிலையில், இலங்கை அரசானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மாகாணத்தை ஆளுவதற்கான காணி அதிகாரத்தை வழங்காது விடின் தமிழ் மக்களின் அரசியல் உரிமை என்பது, தொடர்ந்தும் பறிக்கப்பட்டதாகவே இருக்கும்.

இது தமிழ் மக்களையும் தமிழ் மக்களின் அரசியற் தலைமைகளையும் இலங்கை அரசு தொடந்தும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதாகவே கருதப்படும். இந்நிலையில் இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையின் தீர்வு என்பது, எட்டப்படாததாகவே சிக்கல், தொடரப்போகிறது என்பதே உண்மை நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகம் செல்ல முடியாதவர்கள் வெளிநாட்டு பல்கலையில் கற்க வசதி

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

**பல்கலைக்கழக அனுமதி பெற முடியாத சுமார் 16 ஆயிரத்து 500 மாணவர்கள் வருடாந்தம் வெளிநாடுகளுக்குச் சென்று கற்கின்றனர். இதனால் கடந்த ஐந்து வருடகாலத்தில் ஆயிரத்து 115 மில்லியன் டொலர் அந்நிய செலாவணியை நாடு இழக்க நேரிட்டதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியுள்ளார்.**

இந்த நிலையை மாற்றுவதற்காகவே இலங்கையில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் நிர்மாணிக்கப்பட்டு தகுதியுள்ள இலங்கை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளையை அனுமதிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது.

வருடாந்தம் 16 ஆயிரத்து 500 மாணவர்கள் வெளிநாட்டிற்கு சென்று கல்வி கற்கின்றனர். 3 இலட்சம் பேர் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றினும் 25 ஆயிரம் பேரே பல்கலைக்கழகம் செல்கின்றனர். பணமுள்ளவர்கள் வெளிநாடு சென்று கற்கின்றனர்.

இக்குறைபாட்டை நீக்கவே இங்கு தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுகின்றன. மீரிகமவில் லங்கெஷ்டர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளதோடு இங்கு 10 ஆயிரம் மாணவர்கள் கற்கலாம். இதில் 4 ஆயிரம் இலங்கை மாணவர்களும் 6 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்களும் கற்க வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகம் செல்ல தகுதி இருந்தும் வெட்டுப்புள்ளி காரணமாக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு இங்கு அமைக்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கற்கச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

கல்வியை இறக்குமதி செய்யும் நாடாக அன்றி ஏற்றுமதி செய்யும் நாடாக இலங்கை மாற வேண்டும். எமக்கு பாதிப்பு ஏற்படாதவாறு தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும். எமது இந்த நடவடிக்கையை ஐ.தே.க.எதிர்க்காது. எதிர்காலத்தில் வடக்கிலும் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ முடியும் என்றார். (அ-2)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான தேர்த்திருவிழாவை முன்னிட்டு இசைஞானவாரி திருமதி கனகாம்பரி சிவனேஸ்வரநாதனின் மாணவர்கள் வழங்கும் தெய்வீக இசையரங்க நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இசை இளவல்களான பேரானந்தராஜா டினேசன், ஜெகதீஸ்வரன் மதுஷிகன் ஆகியோர் பாடல்களை வழங்கவுள்ளதோடு அணிசெய் கலைஞர்களாக வயலின்- இசைமாமணி அ.ஜெயராமன், மிருதங்கம்- இசைக்கலைமாமணி சி.துரைராஜா, கடம்- இ.இசைச்சுடர் அ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# உணவு விசமானதில் 19 ஊழியர்கள் சுகயீனம்

(கொழும்பு)

உணவு விசமானதால் மதவாச்சி ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 19 ஊழியர்கள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையினால் வழங்கப்பட்ட மதிய உணவை உட்கொண்டதையடுத்தே இவர்கள் பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகியிருப்பதாக மதவாச்சி பொலிஸார் கூறினர்.

உணவு விசமானதால் 19 ஊழியர்கள் பாதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சைகளின் பின்னர் நால்வர் வீடு திரும்பியுள்ளனர். ஏனைய 15 பேர் தொடர்ந்தும் மதவாச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மதவாச்சி பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-2)

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி

(மானிப்பாய்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினத்தின் நூறாவது பிறந்த நாளையொட்டி நடத்தப்பட்ட இக் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ். மாவட்ட பாடசாலை கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்டதாக இறுதிப் போட்டியின் முதல் சுற்றில் சோமஸ்கந்தாக் கல்லூரி 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் சுற்றில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 25:20 புள்ளிகள் என்ற முன்னிலை பெற்று போட்டியில் விறுவிறுப்பினை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இறுதிச் சுற்றில் சோமஸ்கந்தாக் கல்லூரி 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இறுதியில்மொத்தப்புள்ளிகள்அடிப்படையில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 70:67 என்ற புள்ளிகள் அடிப்டையில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (அ-5-23)

# யாழ்.பிரதேச செயலகத்தில் சர்வதேச முதியோர் தினம்

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றாற்றல் உடையோர் ஆகியோரது வெள்ளைப் பிரம்பு தினம் எதிர்வரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசெயலர்திருமதிசுகுணரதிதெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்க சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் சி.மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந் நிகழ்வில் கலை நிகழ்வுகளும் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ-254)

# குளோரின் குளாய் வெடித்ததில் 250 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

அவிசாவளை பிரதேசத்தில் குளோரின் நீர்க்குழாய் ஒன்று வெடித்ததில் 250 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் குளோரின் சிலிண்டரில் ஏற்பட்ட வாயுக்கசிவே இதற்கான காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றியவர்கள் உள்ளிட்ட 250 பேர் இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் சுவாசப் பிரச்சினைகளை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

பென்ட்ரீக் தோட்ட லயன்களில் வாழ்ந்து வரும் சிறார்களும் வயது முதிர்ந்தவர்களுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் அவிசாவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். 68 கிலோ கிராம் எடையுடைய சிலிண்டர் ஒன்றில் இவ்வாறு வாயு கசிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# கட்சியின் பெயரளவு தலைவராக செயற்பட ரணில் விக்ரமசிங்க தயார்

(கொழும்பு)

கட்சியை பாதுகாப்பதற்கு பெயரளவு தலைவராக செயற்படக் கூட கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சியின் நலனுக்காக பெயரளவு தலைவராக செயற்படவும் தயங்கப் போவதில்லை என ரணில் என்னிடம் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல அதிகாரங்களையும் உயர்பீடத்துக்கு வழங்கி சில காலங்களுக்கு இந்தியா செல்ல விரும்புகின்றேன் என ரணில் தெரிவித்தார்.

கட்சி மீள ஒழுங்கமைத்து கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்லும் நோக்கில் பதவியை துறந்தேன்.

கட்சித் தவிசாளர் பதவியை துறந்த காரணத்தினால் சுதந்திரப் பறவை போன்று கட்சியின் மேம்பாட்டுக்காக பாடுபட முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு கல்லூரியின் [illegible] மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்தோட்ட பயிற்சியில் குடாரப்பு மக்களின் ஆர்வம் முன்னுதாரணம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 34-II

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

அண்மையில் நடைபெற்ற விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான இணையத்தினால் (COSTI) "எதிர்கால பூமி" (Future Earth) திட்டத்தில் உணவுப் பாதுகாப்பும் ஒரு இலக்காக கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் (National Science Foundation) நிதியுதவியுடன் தேசிய கொள்கைக்கான ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் (National Thematic Research Programme) சேர்ந்த கரையோர கிராமமான குடாரப்பு ஆராய்ச்சிக்காக உள்வாங்கப்பட்டு அங்கு வதியும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் வளங்கள் பற்றி ஆராயப்பட்டது. இன்னும் செம்பியன்பற்று, மாமுனை, தனிப்பனை ஆகிய கிராமங்களிலும் இதனை விரிவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மக்கள் மீன்பிடித்தொழிலையே பிரதானமான தொழிலாகக் கொண்டிருப்பதும் அவர்களது உணவு கடலுணவாகவே பொதுவாக இருப்பதனையும் அறிந்து அலகு இங்கு பயிற்சியாக இம்மக்கள் அறிய பரீட்சித்து பார்க்கப்படுகின்றது. இதற்காக பயிற்சி வகுப்பொன்று 01.10.2013 அன்று குடாரப்பு முன்பள்ளியில் நடத்தப்பட்டு பயிருற்பத்தி அலகினை செய்வதற்காக இம்மக்களிடையே நான்கு பேர் கொண்ட நான்கு குழுக்களை உருவாக்கி குழுபோட்டியும் நடத்தப்பட்டது.

குழுக்களில் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் கலந்து கொண்டது சிறப்புக்குரியது. பயிருற்பத்தி அலகொன்றினை உணவுப்பாதுகாப்பிற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் வடமாகாணத்தில் ஆய்வுக்காக உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின் மூலமாக பேண்தகு ஒருங்கிணைந்த உணவுற்பத்தித் தொகுதிகளை உருவாக்குவதன் மூலம் வடமாகாணத்திலுள்ள வசதி மற்றும் வளங்கள் குறைவான குடும்பங்களில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் அவர்களது வாழ்வாதாரம் என்பனவற்றை மேம்படுத்துதல் ஆகியன இனங்காணப்பட்டு செயற்படுத்தப்படவிருக்கின்றது.

தேசிய ரீதியிலான உணவுப்பாதுகாப்பு பற்றிய ஆராய்ச்சித் திட்டத்தில் வீட்டுத்தோட்டங்களை உற்பத்தியலகுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான உற்பத்தியலகுகள் வீடுகள் தோறும் விருத்தியடையும் போது நாம் எதிர்பார்க்கின்ற உணவுப்பாதுகாப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பாரம்பரிய உணவு வகைகளை நாம் ஆவணப்படுத்தி மக்களை இயற்கையுடன் வாழ வகைசெய்து கொடுக்க வேண்டும். நாமே உற்பத்தி செய்து நஞ்சற்ற உணவை உட்கொள்ள முடியும். வடமாகாணமெங்கும் உள்ள வசதி மற்றும் வளங்கள் குறைந்த குடும்பங்களில் இந்த ஆய்வினை செய்வது பொருத்தமானதாக இருக்கும். இதன் மூலம் அவர்களது வருவாய் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில் வடமராட்சி கிழக்கு பிரதேச சபையில் 30 குடும்பங்களைச் கொண்டோம். ஆனாலும் மரக்கறிவகைகளை 15 கிலோ மீற்றர் துாரமுள்ள சந்தையிலிருந்து வாங்கி வந்து சமைப்பதையும் அறிந்தோம்.

இம்மக்களுடைய உணவில் கணிசமான அளவு மரக்கறிவகைகள் உள்வாங்கப்பட வேண்டியது முக்கியமாகும். மேலும் வாழைப்பழம் மற்றும் குறித்த காலத்தில் கிடைக்கும் நாவல் பழங்கள் தான் இவர்கள் உட்கொள்



ளும் பழவகைகளாகும். வேறு பழமரங்களை நடவு செய்து இவர்களுடைய உணவில் பழங்களும் அதிகமாக உட்கொள்ள வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

மணற்பாங்கான நிலத்தில் வாழும் இம்மக்களுக்கு பயிர்களை வளர்ப்பதே பாரிய பிரச்சினையாகும். இதற்காக விவசாய உயிரியல் துறையில் செய்த ஆய்வின் பிரகாரம் உருவாக்கப்பட்ட பயிருற்பத்தி சிறப்பாக 8 நிமிடத்தில் கட்டி முடித்த குழுவுக்கும் ஏனையவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு ஒரு பயிருற்பத்தி அலகினை வர்த்தக ரீதியில் செய்வதற்கு ஏறக்குறைய ரூபா 300 இலிருந்து ரூபா 500 வரை செலவாகின்றது என கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான உள்ளீடுகள் உள்ளூர் தாவரப் பொருட்களாகவும் கழிவுப் பொருட்களாகவும் இருப்பதனால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தமக்குத் தேவையான உற்பத்தி அலகுகளை செலவின்றியும் செய்து கொள்ள முடியும். பலவகையான உணவுப் பொருட்களை உணவாக உட்கொள்வதன் மூலம் சமமான நிறைவான மற்றும் ஊட்டச்சத்துள்ள உணவினை இம்மக்கள் பெற வழிகிடைத்திருக்கின்றது. இம்மாதிரியான உற்பத்தியலகுகளை குடாரப்பு கிராமத்துடன் அண்மித்த செம்பியன்பற்று, மாமுனை, தனிப்பனை ஆகிய இடங்களிலும் அறிமுகப்படுத்தி அங்குள்ளவர்களது வருவாயையும் மரக்கறி பயிர்களை இலகுவில் பெறுவதையும் நாம் உறுதிசெய்து கொள்ளமுடியும். இப்பகுதியில் ZOA எனப்படும் தன்னார்வ உலக தொண்டு நிறுவனம் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியிருக்கின்றனர்.

வீட்டுத்தோட்டம் எனும்போது இங்கே உயிர்ப்பல்வகைமையும் பாதுகாக்கப்பட வேண்டும். பல்வேறு விதமான பயிர்களை உற்பத்தி செய்வதன் மூலம் உயிர்பல்வகைமையை உறுதிசெய்துகொள்ள முடியும். மேலும் பூக்கும் தாவரங்களை உள்வாங்குவதன் மூலம் அயன் மகரந்த சேர்க்கையாளர்களை ஊக்குவிக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் பலவகையான விலங்குகள் குறிப்பாக தேனீக்கள் மற்றும் வண்டுகள் உணவாகக் கொள்ளும் மகரந்த மணிகளை உற்பத்தி செய்யும் மற்றும் தேன்சுரப்பினை உருவாக்கும் பயிர்களையும் வளர்ப்பதன் மூலம் உயிர்ப்பல்வகைமையை சிறியளவில் உள்வாங்கிக் கொள்ளவும் அதனை சிறப்பாக நடைமுறைப்படுத்தவும் வழியுண்டு. சூழலை மாசடையாமல் வைத்திருப்பதுடன் உயிர்ப்பல்வகைமையையும் பேணிப்பாதுகாக்கவும் முடியும்.

உணவுப்பாதுகாப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் போதுதான் வாழ்வாதாரத்தை விருத்தி செய்ய பாடுபடும் வறிய மக்களுக்கு அதன்மூலமாக நன்மை கிடைக்கும். அதற்கான நாளை நாம் எதிர்பார்த்திருக்கும் இவ்வேளையில் தேசிய இலக்காக கொளப்பட்டிருக்கும் உணவுப்பாதுகாப்பிற்கான அனைத்து வழிகளையும் நாம் விருத்தி செயதிட வேண்டும். இங்கே தான் பாரதியின் ஓங்கியொலித்த குரல் இன்னும் அறைகூவலாக கேட்கின்றது. "தனிமனிதனுக்கு உணவில்லையெனில்.." என்பதன் அர்த்தம் புரிகின்றது அல்லவா!. தீர்க்க தரிசனத்துடன் வாழ்ந்த பெரியவர்களின் வாழ்க்கையும் வாழ்ந்த முறைமையும் எமக்கு என்றென்றும் பாடமாகவே நாம் கொள்ளலாம். (முற்றும்)

# இலங்கையை தனிச்சிங்கள நாடாக மாற்றிக்காட்ட எம்மால் முடியும்

## குணதாச அமரசேகர தெரிவிப்பு

அரசாங்கத்தை காப்பாற்ற வேண்டிய அவசியம் எமக்கில்லை. நாட்டையும் சிங்களவர்களையும் காப்பாற்றவே நாம் முயற்சிக்கின்றோம். இலங்கையை தனிச் சிங்கள நாடாக மாற்றிக் காட்டவும் எம்மால் முடியும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒவ்வொரு வார்த்தைகளும் தனி நாட்டுக் கோரிக்கையாகவே அமைந்துள்ளன. சம்பந்தன்,விக்னேஸ்வரன் ஆகியோர் இனவாதம், பிரிவினைவாதம் பேசும்போது நாம் ஏன் பேசக் கூடாது. இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு அரசாங்கம் இணைந்து செயற்படுவது பற்றியோ, அரசாங்கம் அழிவதைப் பற்றியோ எவ்வித கவலையும் எமக்கில்லை. நாட்டையும் நாட்டில் வாழும் அப்பாவி சிங்களவர்களையும் காப்பாற்றவே நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். வடக்கு வாழ் தமிழர்கள் மீது கூட்டமைப்பு அக்கறை காட்டுவதைப் போன்றே நாட்டின் சிங்களவர்கள் மீது நாமும் அக்கறை காட்டுகின்றோம்.

இலங்கையில் இன்னொரு யுத்தம் ஏற்பட்டால் தமிழர்களைக் காப்பாற்ற சர்வதேச நாடுகளும் முன்வரும். ஆனால் சிங்களவர்கள் தொடர்பில் குரல் கொடுக்க எவரும் வரமாட்டார்கள். இதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் விக்னேஸ்வரன், சம்பந்தன் ஆகியோரின் கருத்துகள் அனைத்தும் தனி நாட்டுக் கோரிக்கையின் அடித்தளமாகும். க.வி. விக்னேஸ்வரன் தமிழோசை செய்திச் சேவைக்கு அண்மையில் வழங்கிய செவ்வியினை அரசாங்கம் கேட்கவில்லை என்றே நான் நினைக்கின்றேன்.

அதை ஜனாதிபதி கேட்டிருப்பாராக இருந்தால், விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்திருக்கவே மாட்டார்.

அரசாங்கம் தெரிந்தே தவறு செய்கின்றது. இத் தவறில் இருந்து தம்மை பலப்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். மக்களே அரசாங்கத்தை மாற்ற முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்கு நல்லதை செய்து நாட்டையும் சிங்கள மக்களையும் காப்பாற்ற வேண்டும்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுடன் கைகோர்த்துக் கொண்டு அரசாங்கத்தை ஆட்டி வைக்க நினைக்கின்றனர். அரசாங்கமும் இதைப் புரிந்து கொள்ளாது இந்தியாவின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்க நினைக்கின்றது. இதன் விளைவுகள் பாரதூரமாக அமையும் என்பதை அரசாங்கம் வெகு விரைவில் புரிந்து கொள்ளும்.

விடுதலைப்புலிகளிடம் இருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றிய ஜனாதிபதி மீண்டுமொருமுறை நாட்டை கூறுபோட விடக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளருக்கு நீதிமன்றம் உத்தரவு

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பாக விளக்கமளிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பாதுகாப்புஅமைச்சின்மேலதிகசெயலாளர்சிலும்ரஞ் சித்துக்கு ஹோமாகம நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


ஊடகவியலாளர் எக்னெலிகொடவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோரி அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தாக்கல் செய்துள்ள வழக்கு சம்பந்தமாக விளக்கமளிக்குமாறு நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பாதுகாப்பு அமைச்சின் சார்பில் பதில் வழங்கியிருந்த அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆயுதக் குழு ஒன்று எக்னெலிகொடவை கடத்திச் சென்றதாக தகவல் இருப்பதாக கூறியிருந்தார்.


இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரை நீதிமன்றத்திற்கு அழைத்து அந்தத் தகவல் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என மனுதாரர் தரப்பின் சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் மேலதிக செயலாளருக்கு உத்தரவிட்டது. ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் காணாமற் போனார். அவர் எங்கு இருக்கின்றார். அவருக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிய எந்த தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் ஆட்சி அரங்கேறியது















படங்கள்:-எஸ்.ஆர்.கரன், உ.சாளீன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த சுய நலத்தை கைவிட்டு மக்கள் நலனுக்காக செயற்படுவோம்

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



**போ**ரினால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த மனநிலையில் மக்கள் இருப்பதை நாங்கள் கவனத்திற்கு எடுக்க வேண்டும் என்றும் மனதால் அடிபட்டு, இடிபட்டு தமது சுயகௌரவத்தை இழந்திருந்த எமது மக்கள் இப்பொழுது தான் எழுந்திருக்கப் பழகியுள்ளனர். எனவே, அவர்களின் கரம்பிடித்து ஜனநாயக வழியில் அவர்கள் தலைநிமிர்ந்து செல்லவும் வாழ்க்கையில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படவும் எம்மாலான சகல தையும் செய்ய வேண்டுமெனவும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருமான க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்றது. இதில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் ஆற்றிய உரை...

தலைவர் அவர்களே, வட மாகாணசபை சக உறுப்பினர்களே, மேடைமேல் அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே, சான்றோர்களே, எனதருமை சகோதர, சகோதரிகளே!

எம்முள் சிலர் வேட்பாளர்களாக முன்னர் இங்கு கூடினோம். இன்று(நேற்று) உறுப்பினர்களாக கூடியுள்ளோம்.

பெரும்பான்மையான வேட்பாளர்கள் உறுப்பினர்களாக பரிணாமம் பெற்றார்கள். எனினும் சிலர் விடுபட்டு உள்ளார்கள்.

ஆனால், மக்கள் சேவையில் அவர்கள் வேண்டப்படாதவர்கள் அல்ல. அவர்களின் சேவை, தேவை என்பதை மட்டும் இத் தருணத்தில் அவர்களுக்கு கூறி வைக்கின்றேன். தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் இன்று(நேற்று) ஒரு முக்கியமான கட்டத்தினுள் நுழைகின்றோம்.

இன்று(நேற்று) பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நாம் ஒவ்வொருவரும் எமது கடமைகளையும் பணிகளையும் பற்றுறுதியுடன் இயற்றுவோம் என்றுஉறுதிமொழிகொடுத்தபோது நாங்கள் எங்கள் மக்கள் சார்பிலான எமது கடப்பாடுகளை இன்று(நேற்று) வலியுறுத்தி உள்ளோம் என்பதை நாங்கள் மறத்தல் ஆகாது.

எமது கடமைகளும் பணிகளும் மக்களை மையமாக வைத்தே இயற்றப்பட வேண்டும்.

25 வருடங்களுக்கு மேலாக மக்கள் தமது விருப்பு வெறுப்புக்களை வெளியிட முடியாது தவித்துக் கொண்டிருந்தனர்.

அண்மைய தேர்தலில் அவர்கள் தமது விருப்புவெறுப்புக்களைஊரறிய, நாடறிய, உலகறிய கூறிவிட்டார்கள். அதன் காரண மாகவே நாங்கள் இன்று(நேற்று) பதவி ஏற்றுள்ளோம்.

எனவே, எமது கடப்பாடு மக்கள் பாற்பட்டதே ஒளிய வேறெவர் பாலும் இல்லை.

அண்மையில் நரேந்திரமோடி முக்கியமான ஒரு கூற்றை வெளிப்படுத்தினார். ''வெறும் நல்லாட்சி என்பது போதாது. அவ்வாட்சி மக்கள் பாற்பட்டதாக அமைய வேண்டும். நல்லாட்சி என்பது அபிவிருத்தி செயற்பாட்டில் மக்களை மையப்படுத்துவதாக அமைய வேண்டும்" அவர்கள் சார்பான முன்னேற்பாடுகளை எடுப்பதாக அமைய வேண்டும் என்றார்.

பல வருடகாலம் குஜராத் மக்களின் மனங்கவர்ந்த நாயகன் கூறிய இந்த கூற்று எமக்கும் பொருத்தமுடையதாகும்.

நாம் எமது சகல மக்களினதும் தேவைகளை, விருப்புக்களை அறிந்து செயலாற்ற வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் கூறி வைக்கின்றேன். இன, மத, பக்கச் சார்பு எதுவும் இல்லாது நாம் எமது கடமைகளைச் செய்ய வேண்டும்.

அரசியலில் நுழைவது பணம் சம்பாதிப்பதற்கும் பந்தா காட்டுவதற்கும் என்றிருந்த காலம் மாறவேண்டும்.

நாங்கள் போரின் பின்னரான காலகட்டத்தில் இருக்கின்றோம். மக்கள் சகலதையும் இழந்த ஒரு நிலையில் இருப்பதை நாங்கள் கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

மனதால் அடிபட்டு, இடிபட்டு தமது சுயகௌரவத்தை இழந்திருந்த எமது மக்கள் இப்பொழுதுதான் எழுந்திருக்கப் பழகியுள்ளனர்.

அவர்கள் கரம் பிடித்து அவர்கள் ஜனநாயக வழியில் தலைநிமிர்ந்து செல்லவும் வாழ்க்கையில் மீண்டும் மறுமலர்ச்சி பெறவும் நாம் எம்மாலான சகலதையும் செய்ய வேண்டும்.

எமது சுயநலன்களை அவர்கள் மீது திணித்து அவர்களை மீண்டும் கலவரத்தில் ஆழ்த்தக்கூடாது.

நாம் இப்பொழுது வன்முறைக் காலத்தை தாண்டி வந்துள்ளோம் என்பதை மறக்கக் கூடாது. வன்முறைக் காலத்தில் கையில் ஆயுதம் ஏந்தி மக்கள் எமது கைப் பொம்மைகளாகக் கருதி வாழ்ந்தோம்.

அந்தக் காலம் மலையேறிவிட்டது என்பதை நாம் ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, எமது புதிய சூழலிலே புதிய தராதரங்களை, புதிய நியமனங்களைப் பின்பற்ற வேண்டும். பொது வாழ்க்கையில் வலியுறுத்தப்படும் ஏழு கொள்கைகளை இத் தருணத்தில் எடுத்தியம்புவது உசிதம் என்று நான் கருதுகின்றேன்.

**முதலாவது:**

சுயநலமின்மை. அதாவது பொது வாழ்க்கையில் நுழைபவர்கள் எப்பொழுதுமே பொது நலம் கருதியே முடிவு எடுக்கவேண்டும். தமக்கோ தமது குடும்பத்தாருக்கோ, தமது நண்பர்களுக்கோ நிதி சார்பான அல்லது வேறு வகையான நன்மைகள் பெறக்கருதி முடிவுகள் எடுக்கக் கூடாது.

**இரண்டாவது:**

பொது வாழ்வுக்குள் நுழைபவர்கள் நிதி சார்பான கடப்பாடுகளை வெளியார்களுக்கோ, வெளி நிறுவனங்களுக்கோ கடன்பட்டிருந்தால் அவர்களால் தமது கடமைகளை நேர்மையாகச் செயலாற்ற முடியாமல் போய் விடும். ஆகவே, அவ்வாறு கடன் பட்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**மூன்றாவதாக:**

தகைமை அடிப்படையிலேயே பொது வாழ்வில் நியமனங்கள், உடன்பாடுகள், பரிசுகளை நாம் வழங்கவேண்டும். அதாவது புறநிலை மெய்மை நிலையில் எமது மனங்கள் செயற்பட வேண்டும். அதை objectivity என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

**நான்காவதாக:**

பொதுவாழ்வில் நாம் ஆற்றும் செயற்பாடுகளுக்கு நாம் பதில் அளிக்கத் தயாராக இருக்க வேண்டும். எனவே, தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு இடம் அளிக்கக் கூடாது.

**ஐந்தாவதாக:**

கூடுமான வரையில் நாம் எடுக்கும் தீர்மானங்களை நாங்கள் வெளிப்படையாக எடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பொது மக்கள் நலன் காரணம் காட்டுவதை தடை செய்தால் ஒளிய எமது தீர்மானங்களுக்கு வெளிப்படையாகவே நாம் காரணம் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

**ஆறாவதாக:**

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் பொது மக்கள் கடமைகளை ஆற்றும் போது அவை சம்பந்தமாக தமக்கிருக்கும் தனிப்பட்ட நல உரித்துகளை வெளிப்படையாகச் சொல்லி வைத்தல் அவசியம். அத்துடன் பொதுமக்கள் நலத்தையே முதன்மைப்படுத்தித் தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டும்.

**ஏழாவதாக:**

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் மேற்குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தி தமது வாழ்வில் வாழ்ந்து காட்டி மற்றவர்களுக்கு முன் உதாரணமாக திகழ வேண்டும்.

பொதுவாழ்க்கையில் நான் கூட இப்பொழுதுதான் ஈடுபடத் தொடங்கியுள்ளேன். நீதிபதியாக இருந்தபோது பிழைகள் விட சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்தன.

இப்பொழுது அப்படியல்ல. ஒவ்வொருவரும் பல்லிளித்துக்கொண்டு வரும்போது ஏதோ பின்னணி ஆசையுடன்தான் வருகின்றாரா? என்னை வழிதவற வைக்க முனைந்துள்ளாரா என்று சதாகாலமும் விழிப்புடன் இருந்து செயலாற்ற வேண்டியிருக்கின்றது. உங்களைப் போலத்தான் நானும் கஷ்டத்துடன் செயலாற்ற வேண்டியுள்ளது.

இதுவரைகாலமும் அரசாங்க அதிகாரம் தம்மைச் சார்ந்திருந்தது என்ற மமதையில் எம்மக்களுள் பலர் தான்தோன்றித்தனமாக சுயநல நோக்குடன் மக்கள் நலத்தைக் கருதாது தீர்மானங்களை எடுத்ததாக அறியவந்துள்ளது.

அதே தவறுகளை நாங்களும் செய்வதால் பாதிக்கப்படப் போவது எமது மக்களே. அவர்கள்தான் எமக்கு வாக்களித்து இந்தப் பதவியில் வீற்றிருக்கச் செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிராக, அவர்களின் நல உரித்துக்கு மாறாக நாங்கள் இயங்கக் கூடாது என்பதில் எங்களுக்குள் கருத்தொருமைப்பாடு இருத்தல் அவசியம்.

எமது கட்சி ஒரு கூட்டு கட்சி. பலதரப்பட்ட மனோநிலையில் வளர்ந்த கட்சிகள் சேர்ந்தே இந்தக் கூட்டு கட்சியை அமைத்துள்ளோம்.

எங்கள் கடந்த காலம் எப்படி இருந்ததாயினும் இப்பொழுது நாங்கள் ஜனநாயக வாழ்க்கையில் காலடி பதித்துள்ளோம் என்பதை எக் கட்சியினரும் மறக்கக் கூடாது.

ஜனநாயகத்தில் ஆராய்வும் பேச்சுவார்த்தையும் இணக்கமுமே முக்கியம். அதிகார வலோத்காரம் தவிர்க்கப்பட வேண்டும். இதுவரை காலமும் நாங்கள் அதிகார அல்லது ஆயுத வலோத்காரத்துக்கு பழகி வந்துள்ளோம் என்றால் அதனை இனியாவது தவிர்ப்பது நன்மை பயக்கும் என்று நினைக்கின்றேன்.

எடுப்பார் கைப்பிள்ளைகளாக இதுவரை காலமும் வாழ்ந்து மக்கள் களைத்துப் போய் விட்டார்கள். இனியாவது அவர்கள் தலை நிமிர்ந்து ஜனநாயக வாழ்க்கை வாழ நாங்கள் எம்மாலான சகலதையும் செய்ய முன் வருவோமாக.

முப்பது உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அவர்களுள் இருவர் மற்றைய மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். சகலருக்கும் இருக்கும் கடப்பாடு ஒன்றே. இதை எவரும் மறந்துவிடக் கூடாது.

அதாவது மக்கள் நலன்கருதி செயலாற்றுவதே எமது கடமை. அடுத்த தேர்தலில் நான் வெற்றிபெறுவேனா என்று, எனது கட்சி வெற்றி பெறுமா என்று நான் இப் பொழுதில் இருந்தே சிந்திக்கத் தொடங்கிவிட்டேனானால் பொதுமக்கள் நலன்தான் பாதிக்கப்படும். அவர்கள் முக்கியமல்ல எனது வருங்காலமும் எனது கட்சியின் வருங்காலமுமே முக்கியம் என்றாகிவிடும். அவ்வித மனோநிலையை நாங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் காத்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போமாக.

எமது பதவிகள் ஒரு நம்பிக்கை பொறுப்புக்குள்ளான பதவிகள். எமது அரச அலுவலர்களும் அவ்வாறே பதவி வகிப்பவர்கள். மக்களை வழி நடத்தும் பொறுப்பு, அவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு, அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு, அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு போன்ற பல பொறுப்புக்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசாங்க அலுவலர்களுக்குத் தாங்கள் அரசாங்க சேவகர்கள் என்பதிலும் பார்க்க நாம் மக்கள் பாதுகாவலர்கள் என்ற எண்ணம் வளர வேண்டும். அதுதான் உண்மையும் கூட. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் எங்களை எம் அலுவலகத்தில் எம்மைக் கட்டுப்படுத்தி சிறை செய்துவிட்டார்கள்.

அரசாங்கத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் அடிபணிந்து நடப்பதே எமது கடமை என்று எண்ணும் அளவுக்கு வலு இழந்து விட்டோம்.

மக்கள் சேவையில் ஈடுபடும்போது மக்களே எமது முக்கிய பொறுப்பு என்பதை நாம் என்றென்றும் மறக்கக்கூடாது.

எனவே, மக்கள் சேவையே எமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். சுயநலம் களைந்து மக்கள் சேவையில் உள்நுழைய நாங்கள் யாவரும் முன்வரவேண்டும். எமது வடமாகாண சபை முதன்முதல் வலுப்பெற்று துளிர்த்துள்ளது.

இதை நடாத்துவது நாம். நாம் என்றால் தமிழ்பேசும் மக்கள். தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும். நாங்களே மற்றவர்களுக்கு உதாரணமாக வாழத்தலைப்படுவோம். இப்பொழுதே உலக அரங்கில் எமது தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அயல்நாட்டார் வந்து வாழ்த்திச் சென்றுள்ளனர்.

எமது செயற்பாடுகள் அவர்களைப் பிரமிக்கச் செய்யவேண்டும். எமது சுயநலமற்ற செயற்பாடுகள் எல்லோருக்கும் முன்னுதாரணமாக திகழ வேண்டும். நானும் எனது கடமைகளுக்கு புதியவன். உங்களில் அநேகரும் அப்படித்தான். எனினும் நாங்கள் அனைவரும் சேர்ந்து முன்னேறுவோம். சேர்ந்து முதனிலை அடைவோம். சேர்ந்து நாம் எமது இலக்குகளை அடைவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொகுப்பு : எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இரண்டாவது தடவையும் அதே தவள செய்யாதி ருத்தல் பற்றியெ கவலைப்படவேண்டும் - அலன் தூர்ன்ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# அரசு தப்பிக் கொண்டது குற்றச்சாட்டு இடம்மாறியது

இராமர் காட்டுக்குச் செல்வதற்கும் தசரதன் உயிர் இழப்பதற்கும் முனிவர் இட்ட சாபமே காரணம். எனினும் இராமனை காட்டுக்கு அனுப்பியது கைகேகி என்பதால், மேற்குறித்த இரு சம்பவங்களுக்கும் கைகேகியே காரணம் என்ற குற்றச்சாட்டு சுமத்தப் பட்டது.

ஐயா! முனிபுங்கரின் மகன் மீது தசரதன் அம்பெய் யாதிருந்திருந்தால், எங்களைப் போல் நீவிரும் புத்திர சோகத்தால் இறக்கக் கடவீர் என்று முனிவர் சாப மிட்டிருக்க மாட்டார்.

முனிவரின் சாபத்தில் இருந்து தசரதன் தப்பித்தி ருந்தால் இராமர் காடேகும் செய்தியால் தசரதன் உயிர் துறக்கும் துன்பம் நிகழ்ந்திருக்காது.

என்ன செய்வது இராமருக்குப் பட்டாபிசேகம் நடப் பதைப் பார்க்கும் பாக்கியம் தசரதனுக்கு இல்லை என்பது விதி.

தசரதன் அறியாமல் செய்த தவறின் காரணமாக நேர்ந்த இழப்புத் தொடர்பில் முனிவர் சாபம் இடுவதைத் தவிர்த்திருக்க வேண்டும். அதுவும் நடக்கவில்லை. முனிவர் சாபம் இட்டிருந்தாலும் அதனை நிறை வேற்றுவதில் இயற்கையாவது உதவி செய்யாமல் இருந்திருக்கலாம்; அதுவும் இல்லை. எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

கைகேகிக்கு அவப்பெயர் ஏற்பட வேண்டும் என்பது விதி என்றால் அதனை யாரால்தான் தடுக்க முடியும்.

இங்குதான் ஒரு உண்மை வெளிப்படுகிறது. அதாவது மறைமுகமாக இருக்கக் கூடிய உண்மைக் காரணங்களை எவரும் ஆராய்வதில்லை.

மாறாக நேரடியாக - வெளிப்படையாக தெரி வதையே காரணமாக்கிக் கொள்ளும் மரபு மனித வாழ்வில் உண்டு. இதுதான் உலக நடைமுறை.

இந்த உலக நடைமுறைக்கு தமிழர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விதிவிலக்கல்ல என்றாகி விட்டது.

நேற்றைய தினம் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களும் அமைச்சர்களும் பதவிப்பிர மாணம் செய்து கொண்டனர். இதில் சிலர் பதவிப் பிரமாணம் செய்யவில்லை என்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றிருந்த சில கட்சிகளும் பதவிப்பிரமாண நிகழ்வில் பங்கேற்க வில்லை.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக இருந்தது போல, பதவியேற்பிலும் ஒற்றுமையாக இருந்து அனைத்து உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்திருந்தால் தமிழ் மக்களின் மனம் குளிர்ந்திருக்கும்.

அட! அமைச்சுப் பதவியில் இழுபறிப்பட்டுக் கொண்டாலும் உரிய நேரத்தில் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, தமிழர்களின் ஆட்சிக்குப் பெருமைசேர்த்தார்கள் என்று புளகாங்கிதம் கொண்டிருக்கலாம். ஆனால் அதற்கு நாங்கள் கொடுத்து வைக்கவில்லை.

பொதுவில் தங்களுக்குள் முரண்பட்டுக் கொட்டா லும் ஒரு முக்கியமான நிகழ்வில் கோப தாபங்களை மறந்து; நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என அழைப்பதும் அந்த நிகழ்வில் நாங்கள் கட்டாயம் பங்கேற்போம் என்று கூறுவதும் தமிழர்களின் ஒற்றுமைப் பலத்திற்கு அவசியம்.

என்ன செய்யது அந்தப் பெருந்தன்மை எங்கள் எவரிடமும் இல்லை என்றாகிவிட்டது.

வாக்களித்தவர்களுக்கு கவலை கொள்ளும் உரிமையைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதே நிஜம். இந்த நிஜத்தோடு பதவியேற்ற வடக்கு மாகாண தமிழர் அரசு; இலங்கை அரசுமீது ஆழமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, சர்வதேசம் தலையிட வலியுறுத்தும் என எதிர்பார்த்திருந்த வேளை, குற்றச்சாட்டில் இருந்து இலங்கை அரசு விலகிக்கொள்ளும் அளவில் கூட்டமைப்புக் குள்ளேயே குற்றச்சாட்டு என்றாகியது நிலைமை.

ஆக, குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கை அரசு தப்பித்துக் கொள்ளும் வகையில், எங்கள் ஒற்றுமையீனங்கள் குற்றச்சாட்டுக்களை இடம் நகர்த்திக் கொண்டன.

# பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையை நீக்கவேண்டும்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்து

(கடலூர்)

பொதுநலவாய நாடுகளின் அமைப் பிலிருந்து இலங்கையை நீக்கக்கோரி தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதாக தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவனத் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

குறித்த ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு பல்லாயிரக்கணக் கான பொதுமக்களைத் திரட்டி சென் னையில் நடத்தவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கடலூரில் நேற்றையதினம் பேட்டியொன்றை அளித்துள்ளார். அப்போது அவர் கூறிய தாவது,

பொதுநலவாய கூட்டமைப்பு உரு வான போது ஆண், பெண் ரீதியாகவும், இனம், மொழி, மத ரீதியாகவும் சொந்த நாட்டு மக்களை வேறுபடுத்தி பார்க்கும் நாட்டை அந்த கூட்ட மைப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என விதி ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் இலங்கையை ஆளும் சிங்கள அரசு இலட்சக்கணக்கான தமி ழர்களை படுகொலை செய்துள்ளது. விதிகளுக்கு முரணாக இன மத ரீதியாக வேறுபடுத்தி சித்தரவதை செய்து கொலை செய்தது. எனவே இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர் கள் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என தமிழக வாழ்வுரிமை கட்சி வலியுறுத்துகிறது.

இலங்கை அரசு மனித உரிமை களை மீறி மத வழிபாட்டு தலங்கள், கட்சி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் மீது குண்டு வீசி தாக்கியுள் ளது. இதுபோன்ற மீறல்களுக்காக தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், நியூசிலாந்து போன்ற பல நாடுகள் பொதுநலவாய கூட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. எனவே அதிக அளவில் மனித உரிமைகளை மீறிய இலங்கையை பொதுநலவாய நாடு களின் கூட்டமைப்பில் இருந்து நீக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை களில் இந்தியா ஈடுபட வேண்டும்.

இதனை வலியுறுத்தி சென்னை சேப்பாக்கத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 3 மணி அளவில் பல்லாயிரக்கணக்கான பொது மக் களை திரட்டி தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத் தப்படும் என அவர் கூறினார். (அ-2)

# இலங்கை மீனவர்கள் பிணையில் விடுதலை

இராமேஸ்வரத்தில் கைது செய் யப்பட்ட இலங்கை மீனவர்கள் இருவர் பிணையில் விடுதலை செய்யப்பட் டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் 10ஆயிரம் ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர் கள் இருவரே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி கடல் எல்லை தாண்டி இந்தியாவிற்குள் நுழைந்த குற்றச்சாட்டின் அடிப்படை யில் இவர்கள் கைது செய்யப்பட்டிரு ந்தனர்.

இவர்கள் மீது கடவுச்சீட்டு சட்டத் தில் பொலிசார் வழக்கு பதிவுசெய்து சென்னை புழல் சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு விசாரணை இரா மேஸ்வரம் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் வழக்கு விசாரணைகளின் போது 10 ஆயிரம் ரூபாய் பிணை தொகை அடிப்படையில் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். (அ-2)

# சட்டங்களை தாண்டியும் அகதிகள் படகு ஆஸியை சென்றடைந்தது

அவுஸ்திரேலிய கொக்கோஸ் தீவுகளுக்கு இலங்கையில் இருந்து அகதி படகு ஒன்று சென்றுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் அகதி கள் தொடர்பில் கடுமையான நடவடிக் கைகளை அறிவித்துள்ள நிலையில் இந்த படகு சென்றுள்ளது.


அவுஸ்திரேலிய நேரப்படி நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்த படகை கொக்கோஸ் தீவு மக்கள் அவதானித் துள்ளனர்.

எனினும் இது தொடர்பில் அவுஸ் திரேலிய கடற்படையினர் இன்னும் தகவல்களை வெளியிடவில்லை.

அவுஸ்திரேலியா அண்மையில் விடுத்துள்ள அறிவித்தலின் போது படகு அகதிகளை குறைக்கும் வகை யில் அவுஸ்திரேலியாவுக்குள் வரும் அகதி படகுகள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதில்லை என்று தெரிவிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை அமைப்புக்களின் விமர்சனங்களில் இருந்து தப்புவதற் காகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டிருந் தது. (அ-2)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நான் ஏற்கனவே கூறியதுபோல், உங்களுக்குள் மாற்றம் ஏற்படாமல் இருப்பது உங்கள் தவறல்ல. நாம் அனைவரும்மே காலத்தினால் உருவாக்கப்பட்டவர்கள். அதிர்ஷ்டவசமாகக் காலங்கள் மாறி நாம் இப்போது ஓர் அற்புதமான காலகட்டத்தில் நுழைந்துவிட்டோம். பெரும் பாலான மக்கள் பெரும் ஆன்மீக வளர்ச்சியை அடைய விருக்கின்றனர்.

உங்களுடைய சக்தி வாரத்திற்கு வாரம், மாதத்திற்கு மாதம், வருடத்திற்கு வருடம் வெகுவேகமாக அதிகரித்துக்கொண்டே போகும். ஒருமுறை தொட்டாலோ அல்லது ஒரு பார்வையினாலோ உங்களால் அவர்களுக்குப் பெரும் ஆன்மீக மாற்றத்தை நிகழ்விக்கமுடியும். ஆகையால் நீங்கள்தான் மக்களை மாற்றப்போகிறீர்கள். மக்களைத் தொடவேண்டிய அவசியமும் கூட இல்லாமல் தானாகவே மாற்றங்கள் நிகழும் காலகட்டம் வந்து விடும்.

நீங்களும் முக்திநிலையை அடைந்து மற்றவர்களும் அந்நிலையை அடைய உதவினால் நாம் இந்த இயற்கையின் மாற்றத்திற்கு உதவி புரிந் தவர்களாவோம். நாம் இம்மாற்றத்தின் ஒரு பகுதி, இயற்கையின் ஒரு பகுதி, நாம் அதனுடன் ஒத்துழைக்க வேண்டும். இயற்கை நம் ஒத்துழைப்பை எதிர் பார்க்கிறது. நாம் அதற்கு உதவிக்கரம் நீட்டவேண்டும். இல்லையேல் இம் மாபெரும் நிகழ்ச்சி கடந்து செல்லும் ஒரு நிகழ்வாக மட்டுமே இருந்துவிடும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## தவறுகளையும் வாழ்த்துங்கள்



✡ மனதில் தூய்மையான எண்ணங்களை மட்டும் அனு மதியுங்கள். நல்ல செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். தீய விடயங்கள் தலைகாட்டாதபடி இருப்பதற்கு இது ஒன்றே வழி.

✡ பகை, பொறாமை ஆகியவற்றை வெளியிட் டால், வட்டியும் முதலுமாக புறப்பட்ட இடத்திற்கே திரும்பி விடும்.

✡ நல்லவனாக இருங்கள். பிறருக்கு நன்மை தரும் செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். ஆன்மீக வாழ்வில் உயர்வதற்கான வழி இது மட்டுமே.

✡ பண்டைக்காலத்தில் வாழ்விற்குரிய விதியாக தியாகம் கருதப்பட்டது. இனி வரப்போகும் பலகோடி நூற்றாண்டு காலத்திற்கும் இந்த விதி பொருந்தும்.

✡ செய்த தவறுகளை வாழ்த்துங்கள். அவை, உங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.

✡ எது நல்லதென்று மனதிற்குப் படுகிறதோ அதை மட்டுமே செயற் படுத்துங்கள்.

# தமிழக மீனவர்களை விரைவில் விடுதலை செய்ய புதிய நடைமுறை

இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்படும் தமிழ் நாட்டு மீனவர்களை விரைவாக விடுதலை செய்ய பொறிமுறை ஒன்றை அமைக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக இந்திய மத்திய அமைச்சர் அனில் கோசுவாமி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஏற்கெனவே பாகிஸ்தானுடன் இந் தியா கொண்டிருக்கின்ற உடன்படிக் கையை போன்று இந்த பொறி முறையும் அமையும் என்று அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தகவல் தந்த அவர், இலங்கையில் இந்திய மீனவர்கள் அதிக காலம் தடுதது வைக்கப்பட்டுள்ளமையை இந்த முறை தடுக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சச்சினின் ஓய்வு குறித்து பிரபலங்கள்....



ஸ்ரீகாந்த் கங்குலி கவாஸ்கர்

கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் 200 ஆவது டெஸ்டுடன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்த ஓய்வு குறித்து கிரிக்கெட் பிரபலங்கள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு,

ஸ்ரீகாந்த்: சச்சின் டெண்டுல்கர் இடத்தை நிரப்புவது கடினம். ஒரு ஆட்டத்தில் சதம் அடிப்பது பெரிய விடயம். ஆனால் அவர் சர்வதேச போட்டியில் 100 சதம் அடித்து உள்ளார்.

கங்குலி: சரியான நேரத்தில் சச்சின் ஓய்வு முடிவு எடுத்திருக்கிறார். அவர் கடைசியாக விளையாடும் 2 டெஸ்ட்டை அதிக மக்கள் நேரில் காணவேண்டும்.

கவாஸ்கர்: டெண்டுல்கர் ஓய்வால் பெரிய வெற்றிடம் விழும். அந்த இடத்தை நிரப்புவது என்பது எளிதான விடயம் அல்ல. டெஸ்ட போட்டியில் சச்சின் இறங்கும் 4ஆவது வரிசை இடத்தை நிரப்புவது கடினமானது.

அசாருதீன்: அவரது இந்த முடிவுக்கு நாம் மதிப்பளிக்கவேண்டும். அவரது ஆட்டம் நமக்கு சந்தோஷத்தையும், பெருமையையும் அளித்துள்ளது.

லட்சுமணன்: இது அவரது சொந்த முடிவு. அதற்கு மதிப்பளிக்க வேண்டும். இது ஓய்வுக்கு சரியான நேரம் என்று உணர்ந் திருக்கிறார. சச்சினுடன் ஒன்றாக விளையாடியது மகிழ்ச்சியான அனுபவம் என்றார்.

# சவாலான இலக்கை நோக்கி பங்களாதேஷ் துடுப்பாட்டம்


பங்களாதேஷ்க்கு எதிரான முதல் டெஸ்டில், வில்லியம்சன், வாட்லிங் சதம் அடித்து கைகொடுக்க, முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 469 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஸ் அணி இரண்டு விக்கெட்டுகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பங்களாதேஷ் சென்றுள்ள நியூசிலாந்து அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட், சிட்டகாங்கில் ஆரம்பமாகியது. முதல நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்து 280 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணியின் புரூஸ் மார்டின் (1), கோரி ஆண்டர்சன் மடித்தார். பத்தாவது விக்கெட்டுக்கு 127 ஓட்டங்களை சேர்த்தபோது, வாட்லிங் (103) ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 469 ஓட்டங்களை பெற்றது. வில்லியம்சன் 114, புல்டன் 73, பவுல்ட் (52) ஆட்டமிழக்காமல் இருந்தார். பங்களாதேஷ் சார்பில் அப்துர் ரசாக் 3, சோஹாக் காஜி, சாகிப் அல் ஹசன் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின் முதல் இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணியின் தமிம் இக்பால், ஆட்டத்தின் முதல் பந்தில் ஆட்டமிழந்தார். மற்றொரு ஆரம்ப வீரர் அனாமுல் ஹேக் (3) ஏமாற்றினார். பின் இணைந்த மார்ஷல் அயுப், மோமியுல் ஹேக் ஜோடி நிதானமாக ஆடியது. நியூசிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்த மோமியுல், அரைசதம் அடித்தார்.




(1) ஏமாற்றினர். அடுத்து வந்த பிராஸ்வெல் (29) நிலைக்கவில்லை. இஷ் சோதி (1) சொதப்பினார். பின் இணைந்த வாட்லிங், டிரன்ட் பவுல்ட் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வாட்லிங், டெஸ்ட் அரங்கில் 2ஆவது சதம் அடித்தார். பவுல்ட் அரைசத

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்சில் பங்களாதேஸ் அணி 2 விக்கெட்டுக்கு 103 ஓட்டங்கள் எடுத்து, 366 ஓட்டங்கள் பின்தங்கி இருந்தது. அயுப் (21), மோமியுல் (77) ஆட்டமிழக்காமல் இருந்தனர். நியூசிலாந்து சார்பில் பவுல்ட், பிரேஸ்வெல் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

# இந்திய நட்சத்திரம் சச்சின் டெஸ்டிலிருந்து ஓய்வு




இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முடிவிலேயே அவர் ஓய்வு பெறவுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. இதன் இரண்டாவது போட்டி நவம்பர் 14ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெறவுள்ளது. இந்நிலையிலேயே இரணடாவது டெஸ்ட் போட்டியின் முடிவில் தான் ஓய்வு பெறவுள்ளதாக சச்சின் டெண்டுல்கர் அறிவித்துள்ளார். ஏற்கனவே ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகள், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து அவர் ஓய்வு பெறவுள்ள நிலையில், டெஸ்ட் போட்டிகளிலிருந்தும் தற்போது ஓய்வு பெறவுள்ளார்.

தனது வாழ்க்கையில் எல்லா நேரமும் இந்தியாவிற்காக விளையாடுவதற்குக் கனவு கண்டிருந்ததாகத் தெரிவித்த சச்சின் டென்டுல்கர், கடந்த 24 வருடங்களும் அந் தக் கனவில் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிட்டார்.

கிரிக்கெட் இன்றி வாழ்வொன்றை நினைத்துப் பார்க்க முடியவில்லை எனக் குறிப்பிட்ட சச்சின் டெண்டுல்கர், 11 வயதிலிருந்து தன் வாழ்வோடு கிரிக்கெட் இணைந்து காணப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டார்.

## சச்சினின் சாதனை பயணங்கள்

- ✔ மும்பையில், 1988இல் நடைபெற்ற லார்டு ஹாரிஸ் ஷீல்டு தொடரில் சச்சின், வினோத் கம்ப்ளி ஜோடி 664 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தது. இதன்மூலம் பாடசாலை அளவிலான கிரிக்கெட்டில், அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற பெருமை பெற்றது.
- ✔ இதன் மூலம், 1989இல் கராச்சியில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் அறிமுகம் ஆகும் வாய்ப்பு கிடைத்தது. இப்போது உலகில் அதிக டெஸ்ட் போட்டிகளில் (198) பங்கேற்ற வீரர் என்ற பெருமை இவருக்குத் தான்.
- ✔ இவரை அடுத்து, அவுஸ்திரேலியாவின் ரிக்கி பாண்டிங், ஸ்டீவ் வாக் ஆகியோர் தலா 168 டெஸ்டில் விளையாடினர். அடுத்த 2 இடங்களில் இந்தியாவின் டிராவிட் (164), தென்னாபிரிக்காவின் கலிஸ் (162) உள்ளனர்.
- ✔ டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் (15,837) எடுத்த முதல் வீரர் சச்சின் தான். அடுத்த 2 இடங்களில் அவுஸ்திரேலியாவின் பொண்டிங் (13,378), இந்தியாவின் டிராவிட் (13,288) உள்ளனர்.
- ✔ டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் சச்சின் (51) முன்னிலை வகிக்கிறார். தென்னாபிரிக்காவின் கலிஸ் (44), அவுஸ்திரேலியாவின் பொண்டிங் (41) அடுத்த இரு இடத்தில் உள்ளனர்.
- ✔ 1989, பாகிஸ்தானுக்கு எதிராக குஜ்ரன்வாலா ஒருநாள் போட்டியில் அறிமுகமான சச்சின், மொத்தம் 463 ஒருநாள் போட்டியில் விளையாடினார். இதன்மூலம் அதிக ஒருநாள் போட்டியில் விளையாடிய வீரர்கள் வரிசையில் முதலிடம் பெற்றார். 2, 3ஆவது இடத்தில் இலங்கையின் ஜெயசூர்யா (445), ஜெயவர்தனா (404) உள்ளனர்.
- ✔ ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் மற்றும் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலிலும் சச்சினுக்குத் (18,426 ஓட்டங்கள், 49 சதம்) தான் முதலிடம். இவரை அடுத்து அவுஸ்திரேலியாவின் பொண்டிங் (13,704, 30 சதம்), இலங்கையின் ஜெயசூர்யா (13,430, 30 சதம்) உள்ளனர்.
- ✔ ஒருநாள் போட்டியில் இரட்டை சதம் அடித்த முதல் வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார் சச்சின். இவர், குவாலியரில், 2010இல் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில், 147 பந்தில் 200 ஓட்டங்கள் எடுத்தார்.
- ✔ தாகாவில், 2012இல் நடைபெற்ற பங்களாதேசுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சதம் அடித்த சச்சின், சர்வதேச போட்டிகளில் (டெஸ்ட் 51 , ஒருநாள் 49) "சதத்தில் சதம்" அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார்.
- ✔ சமீபத்தில் முடிந்த சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடரில், அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் சேர்த்து 50 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் (954 போட்டி, 50,024 ஓட்டங்கள்) எடுத்த முதல் இந்தியர் என்ற புதிய சாதனை படைத்தார். சர்வதேச அளவில் இந்த இலக்கை எட்டிய 16ஆவது வீரரானார்.
- ✔ டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வுபெற உள்ள இவர், மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் மூலம், 200 டெஸ்டில் விளையாடிய முதல் வீரர் என்ற மேலும் ஒரு புதிய சாதனை படைத்து விடை பெற காத்திருக்கிறார்.
- ✔ ஒருநாள் போட்டி வரலாற்றில், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக சதம் (9) அடித்த சச்சின், இலங்கைக்கு எதிராக அதிக ஓட்டங்களை (3113) பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் சுயாதீனமாக செயல்பட ஒத்துழைப்பு வழங்குங்கள்

## வ.மா.ச. எதிர்க்கட்சித் தலைவர் கமல் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தேர்தல் முடிவடைந்து மூன்று வாரங்களாகிவிட்டது. ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்கிடையிலான பதவிப் போட்டிகள் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை.

கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் யாரை விரும்பியிருந்தாலும் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட விக்னேஸ்வரன் அவர்களை தமிழ் மக்கள் முழு விருப்பத்தோடு அதிகப் பெரும்பான்மை விருப்பு வாக்குகளை வழங்கி முதலமைச்சராக தெரிவு செய்திருக்கின்றார்கள். மக்களின் விருப்பமும், எதிர்பார்ப்பும் அதுவாக இருப்பதால் **மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு** என்று ஏற்றுக் கொள்வதுதான் நியாயமானதாகும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான க.கமலேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் முதலமைச்சரான விக்னேஸ்வரன் அவர்களுக்கு தொடர்ந்து தர்ம சங்கடங்களை ஏற்படுத்துவதாக உள்ளன.

அவர் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொள்ளும் வரலாற்று நிகழ்வை பகிஷ்கரித்து ஒரு அவமானத்தை ஏற்படுத்தினார்கள். அதையும் பெருந்தன்மையோடு முதலமைச்சர் பொறுத்துக் கொண்டார்.

இப்போது பல்வேறு காரணங்களையும், தகுதிகள் சார்ந்தும் சிந்தித்து அவர் நியமித்திருக்கும் வடக்கு மாகாண சபைக்கான அமைச்சரவையையும் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் விமர்சனத்திற்கு உட்படுத்தியிருப்பதும், தத்தமது கட்சி நலனில் இருந்து கொண்டு அதை நிராகரித்து பதவியேற்பு வைபவத்தை புறக்கணித்திருப்பதும் முதலமைச்சர் மீது ஆரம்பத்திலேயே அநாவசியமான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

இவ்வாறான முரண்பாட்டு வெளிப்பாடுகளானது, தமிழ் மக்கள் வழங்கிய மகத்தான ஆணையை அவமதிப்பதாகவுள்ளது. தவிரவும் வடக்கு மாகாண சபையை வலிமையான சபையாக வழிநடத்த விருப்பங் கொண்டிருக்கும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு பெரும் பின்னடைவாகவே அமையும்.

நடைமுறை அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொண்டு சாணக்கியமாக செயற்படுத்துவதன் மூலமே வடக்கு மாகாண சபை எம்மாலும் பாதுகாத்து பலப்படுத்த முடியும். ஒற்றுமையீனங்களுக்கு மாகாண சபையை பலி கொடுத்துவிடுவதற்கு எவரும் இடமளித்துவிடக்கூடாது என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

சதிகளுக்குள் சிக்குண்டு தமிழ் மக்களின் ஆணையையும், எதிர்பார்ப்பையும் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் சிதைத்து பெரும் வரலாற்றுத் துரோகத்தை செய்துவிடக் கூடாது. முதலமைச்சரை பூரணமான விருப்பத்தோடுதான் தெரிவு செய்தீர்கள் என்பது உண்மை என்றால், முதலமைச்சர் எடுக்கும் தீர்மானங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். முதலமைச்சரை சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் செயல்படவும் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் ஒத்துழைத்துச் செயலாற்ற வேண்டுமென வடமாகாண சபையின் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் கேட்டுக்கொள்கின்றேன் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ரு)

## தமிழ் மக்கள்...

படையிலான தீர்வு கேட்டு அதன் பின்னர் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை கிடைக்கப்பெற்று தனித்துவமான வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தற்போது போட்டியிட்டு மக்களின் ஆணையைப் பெற்றுள்ளோம்.

வடக்கு-கிழக்கு என்பது சரித்திர ரீதியாக - வரலாற்று ரீதியாக எமது தாயக மண்.

எமது தாயக மண் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்த் தேசியம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எமது இழந்த மண்ணிலேயே சுயாட்சி உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டு எங்களுக்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அதற்கான ஒரு சந்தர்ப்பமாக ஒரு தொடக்க புள்ளியாக இந்த மாகாண சபையினை நாம் கருதுகிறோம்.

வடக்கின் முதலமைச்சர், எமது குழந்தைகள் ஆயிரம் ஆயிரமாய் குண்டு வீசி கொல்லப்பட்டதையும் , ஒரு நேரக் கஞ்சி இல்லாமல் சாகடிக்கப்பட்டதையும் நினைத்துப் பார்த்திருப்பார் என நம்புகிறேன்.

எல்லா நாடுகளும் பார்த்துக் கொண்டிருக்க முள்ளிவாய்க்கால் வரை எமது மக்கள் கொல்லப்பட்டனர்.

கொத்துக் குண்டு வீசப்பட்டது, பொசுபரசு குண்டுகள் வீசப்பட்டன. எவரும் எங்களுக்காக பேசவில்லை. நாம் அநாதைகளாக்கப் பட்டோம்.

மண்டைதீவிலிருந்து வலி.வடக்கு என அனைத்து தமிழ் பிரதேசங்களிலும் மண் அபகரிப்பு தொடர்கின்றது.

போராளிகள் இன்றும் சிறையில் வாடுகின்றனர். 90 ஆயிரம் விதவைகள் வாழ்விழந்து நிற்கின்றனர். பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், காணாமற்போயுள்ளனர். இவற்றுக்கெல்லாம் சர்வதேச பன்னாட்டு விசாரணை ஒன்று எமக்கு வேண்டும்.

தமிழீழம் என்ற வார்த்தையினை உச்சரித்த தந்தைசெல்வாவின் நினைவுத்தூபிக்கு மலர் அஞ்சலி செய்துள்ளோம். ஆகவே எமது போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை.

ஆகவே வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களே! உறுப்பினர்களே! எமது மண்ணில் எமது சுயநிர்ணயம் ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழ்த் தேசியம் அங்கீகரிக்கப்படும் வரை போராடுவோம்.

ஆகவே இப்போராட்டத்தில் நீங்களும் உண்மையாக இருந்தால் நாங்களும் உங்களுடன் இருப்போம். மக்களும் உங்களை பலப்படுத்துவார்கள் என்றார். (செ-4)

## ஆயுத அடக்...

பந்தா காட்டுவதற்கும் என்றிருந்த காலம் மாற வேண்டும்.

எங்கள் கடந்த காலம் எப்படியிருந்த தாயினும் இப்பொழுது நாங்கள் ஜனநாயக வாழ்க்கையில் காலடி பதித்துள்ளோம். ஒரு புதுயுகம் பிறந்துள்ளது என்பதை எக் கட்சியனரும் மறக்க கூடாது.

அதிகார வலோத்காரம் தவிர்க்கப்பட வேண்டும். இதுவரை காலமும் நாங்கள் அதிகாரம் அல்லது ஆயுத வலோத்காரத்திற்கு பழகிவந்துள்ளோம் என்றால் அதனை இனியாவது தவிர்ப்பது நன்மை பயக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முதலமைச்சர் ஆற்றிய உரை முழுமையாக உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ளது. (செ-4,6)



வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் வடமாகாணசபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றபோது...

## அரசியல் தீர்வில்...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்திற்குப் பிறகு பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு பிரமாண்டமான வெற்றியைப் பெற்றிருக்கின்றார்கள்.

பலவிதமான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்கள் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் தீர்ப்பை அளித்திருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

பிரிக்கப்படாத ஒருமித்த நாட்டுக்குள் தாங்கள் சமபிரஜைகளாக வாழ்வதற்கு தமக்கு உரித்துடையது என்பதை மக்கள் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் கூறியிருக்கின்றார்கள்.

ஒரு நாட்டின் ஆட்சி முறைக்கு, ஆட்சி ஒழுங்கிற்கு ஜனநாயகம்தான் அத்திபாரமாக யிருக்கின்றது என்றால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும்.

எமது மக்களுக்கு நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்வது எமது கடமை.

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக எமது மக்கள் கடுமையாக உழைத்திருக்கின்றார்கள்.

நாங்கள் எவருடனும் மோதவிரும்பவில்லை. எல்லோருடனும் ஒத்துழைத்து நாங்கள் செயற்பட விரும்புகின்றோம். இன்றைய சூழலில் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என்று நாங்கள் கருதுகின்றோம்.

நியாயபூர்வமான ஒத்துழைப்பின் பிரகாரம் சிரமங்களைக் கையாள நாங்கள் தயாராகயிருக்கின்றோம்.

இரண்டு முக்கியமான விடயங்களை நாங்கள் தற்போது எதிர்நோக்கியுள்ளோம்.

முதலாவது வடக்கு மாகாண சபை முழுமையாக இயங்க வேண்டும். திறமையாக செயற்பட வேண்டும். தற்போது அரசியல் சாசனத்திலுள்ள சகல அதிகாரங்களையும் வட மாகாண சபை பயன்படுத்தி அந்த அதிகாரங்கள் மூலமாக மக்களுக்கு பல சேவைகளை ஆற்ற வேண்டும்.

மேலும் பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்கை வடக்கு தேர்தலுக்கு முன்பு நாங்கள் சென்று சந்தித்தபோது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும்.

வடக்கு மாகாண சபையுடன் ஒத்துழைக்க நாம் தயாராகயிருக்கின்றோம் என்று கூறியிருந்தார்.

இந்தியா மாத்திரமல்ல வேறுபல நாடுகளும் வடக்கு மாகாண சபைக்கு உதவ முன்வருவார்கள் என்பதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை.

எனவே வடக்கு மாகாண சபையை தற்போதுள்ள சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி இயங்க வைக்க எங்களால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

இரண்டாவது இந்த நாட்டில் ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும். எமது மக்கள் இந்த நாட்டில் பாதுகாப்பாக வாழ வேண்டும். எமது மக்கள் கௌரவமாக சுயமரியாதையுடன் வாழ வேண்டும்.

சரித்திர ரீதியாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் நாங்கள் போதிய விசுவாசமான சுயாட்சியைப் பெற்று எமது அரசியல் ரீதியான, பொருளாதார ரீதியான, கலாசார ரீதியான அபிலாசைகளை எங்களுடைய தீர்மானங்களின் அடிப்படையில் நாங்கள் நிறைவேற்றி எங்களின் தனித்துவதற்தைப் பேணிப் பாதுகாத்து எங்களுடைய பிரதேசத்தின் மொழி ரீதியான, கலாசார ரீதியான அடையாளங்களைப் பேணிப் பாதுகாத்து நாங்கள் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்ற அவ்விதமான தீர்வை பெற வேண்டும். அவ்விதமான தீர்வு எமக்கு கிடைக்க வேண்டும்.

இது ஒரு புதுவிடயம் அல்ல. உலகத்தில் பல்வேறு நாடுகளில் பல்வேறு இனமக்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் இவ்விதமான ஒழுங்குகள் இருக்கின்றன.

ஒற்றுமையின் அடிப்படையில் வெவ்வேறு மக்கள் தங்கள் தனித்துவத்தை பேணிப் பாதுகாக்கக் கூடிய வகையிலே தங்களுடைய தனித்துவமான அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் நாட்டுக்கு எந்த விதமான குந்தகமும் இல்லாமல் பல நாடுகளில் அரசியல் சாசனங்களில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆதலால் அவ்விதமான ஆட்சி ஒழுங்கு இந்த நாட்டில் ஏற்பட வேண்டியது அத்தியாவசியமானது. வெவ்வேறு தனித்துவம் வாய்ந்த மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் அவ்விதமான அதிகார ஒழுங்குகளைத் தவிர்த்துக் கொள்ள முடியாது. நடைமுறையில் இருக்க வேண்டியது அத்தியாவசியமானது.

நாட்டிற்குள்ளேயே ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கு நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருந்திருக்கின்றோம்.

ஆனால் நாட்டிற்குள் ஒரு அரசியல் தீர்வு இன்றுவரை ஏற்படவில்லை என்றால் அதற்கு அடிப்படைக்காரணம் அவ்வாறான ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாக செயற்படவில்லை.

சுமார் 30 வருடமாக நடைபெற்று வந்த யுத்தம் தீர்வுக்கு தடையாக இருந்திருக்குமாக இருந்தால் தற்போது யுத்தம் முடிவிற்கு வந்திருக்கின்றது. ஒரு அரசியல் தீர்வைக் காணலாம்.

ஆனால் அது விடயம் சம்பந்தமாக யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பும் கூட் இலங்கை அரசாங்கம் விசுவாசமாக செயற்படவில்லை.

இன்று இந்தப் பிரச்சினை அதாவது இலங்கையில் வாழும் தமிழர்களின் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மயமாக்கப்படுவதற்கு முக்கியமான காரணம் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாக செயற்பட்டு ஒரு தீர்வைக் காண் முன்வராமையே எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அத்தோடு சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறி நடந்திருக்கின்றனர். சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளனர்.

அவர்களால் உருவாக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கூட அவர்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(செ-6)

## கிரிக்கெட் போட்டி இன்று

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் நியூஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்.சென்றல் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மண்ணில்

விஜயதசமி அன்று
புதிய பிரிவு விருவுரைகள் யாவும் ஆரம்பம்

சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்

**BTEC HND in...**

> Computing & Systems Development
> Quantity Surveying
> Civil Engineering
> Business Management
> Biomedical Science
> Law
> Psychology

Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)

விசேட **30%** கட்டணக் கழிவைப் பெற்றுக் கொள்ளவும்.



மேலதிக விபரங்களுக்கு

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road,
Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

www.bcas.lk



யாழ்ப்பாண விவசாயிக்களுக்கு நற்செய்தி

எமக்கு தரமான தக்காளி (100 கிலோ) மற்றும் கத்தரிக்காய் (50 கிலோ) தினமும் பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி பஸ்தரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கொடுப்பனவு ஆர்டிபி வங்கி ஊடாக 24 மணித்தியாலத்திற்குள் செலுத்தப்படும்.

உங்களுக்கு ஆர்வம் இருப்பின், தயவு செய்து **077-7377813** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் உரையாடவும். (4150)



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(Gov. Reg.No: W/A 76795)

**Vivekananda Academy**, 0212220393

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795) (C-5153)



## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.

4 1/2 ரக்டர் - 15,500 /-

தொடர்புகளுக்கு : தீபன்

0776766499, 0777590792 (C-5150)



## வீடு வாடகைக்கு உண்டு

A-9 கண்டி வீதி, சாவகச்சேரியில் 5 அறை 3 கோல் சமையல் அறை, மலசலகூடம், நல்ல தண்ணீர், மற்றும் தரிப்பிட வசதியுடன் நல்ல சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.

தற்போதுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகில்

**தொடர்பு: 021 490 6364**

மா.செல்வரத்தினம்,
அன்னையில்லம், குமரகோட்டம், கோண்டாவில்.



## கடை வாடகைக்கு

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில், பிறவுண் வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0776539926 (C-5155)



## கடை வாடகைக்கு உண்டு

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள சின்னத்துரை கட்டிடத்திலுள்ள கடை. 40 அடி நீளம் 11 அடி அகலம்.

தொடர்புக்கு :
0777207539 (C-5135)


### 8 உறு...

வகிக்கும் ஏனைய கட்சி உறுப்பினர்கள் யாரும் பங்கேற்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். இல் அங்கம் வகிக்கும் 5 உறுப்பினர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபை உறுப்பனராக தெரிவு செயயப்பட்டுள்ள சித்தார்த்தன்தலைமையிலான புளொட்டில் அங்கம் வகிக்கும் 2 உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதன் தலைமையிலான ரெலோவில் அங்கம் வகிக்கும் ஒருவரும் இப்பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட ரெலோவின் கனகலிங்கம் சிவாஜிலிங்கம், புளொட்டின் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர். எல்.எவ்இன் கந்தையா சர்வேஸ்வரன், சிவப்பிரகாசம சிவமோகன், எம.தியாகராஜா, இந்திரராஜா, மயில வாகனம், சின்னத்துரை, தாமோதரம்பிள்ளை ஆகிய உறுப்பினர்கள் இப்பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கவில்லை. (செ-4,6)

### மாவீரர்...

கொண்ட 4 அமைச்சர்களில் ஒருவர் தான் பதவியேற்கும் போது எல்லா புகழும் மாவீரர்களிறகே எனக் கூறி பதவியேற்றுக் கொண்டார்.

மேடையில் உரையாற்றிய ஒவ்வொருவரும் மாவீரர்களினை நினைவு கூர்ந்த போதுமக்களின கைத்தட்டல்கள் மணடபத்தினை அதிர வைத்தன. (அ-4,6)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af

*Learn French The French Way*
*பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்*

யார் AF இல் French படிக்க முடியும்?

திருமணம் மூலம் வெளிநாடு (France, Canada...) செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் & French கற்கவிரும்புவோர். இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்களும் படிக்கிறார்கள்.



- Speaking, writing, listening & reading திறமைகளில் தேர்ச்சிபெற..
- 6 மாத கற்கைநெறியின் (100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டுகிறது. பின் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்.
- 6 மாதத்தினை பூர்த்திசெய்யாதோர் கடிதம் ஒன்றை பெறலாம்.
- International Exams : DELF (A1,A2), களுக்கு யுகு இல் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும்.

*குறிப்பு: நீங்கள் French கற்கும்*

✓ *நிறுவனம் France அரசாங்கம் மற்றும் French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்டதா?*
✓ *நிறுவனத்தின் Exams, Certificates என்பன உண்மையில் பெறுமதியானதா? என்பவற்றைக் தெரிந்துகொள்வதால் உங்கள் பணத்தையும் நேரத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.*

✓ எமது தலைமை நிறுவனம் Paris இலும் கிளைநிறுவனங்கள் இலங்கையில் COLOMBO, GALLE, KANDY, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. யாழில் French Embassy யின் அனுசரணையுடன் 1976 இல் இருந்து... உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Françaises உள்ளன. (French Embassy website: www.ambafrance-lk.org).

புதிய வகுப்புகள் விரைவில் (சனி & ஞாயிறு)... இன்றே பதிவுசெய்யுங்கள்... (4144)

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 நேரில் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



## STUDY in Latvia



- EUROPE நாட்டில் கல்விகற்க அரியதொரு வாய்ப்பு
  - பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, நோர்வே.... ஆகிய நாடுகளிற்கு இலகுவாக சென்றுவரக்கூடிய அரிய வாய்ப்பு
- G.C.E A/L- 3Pass கட்டாயம் தேவை
- IELTS கட்டாய தேவை இல்லை.
- வங்கிக்கணக்கு காட்டவேண்டிய கட்டாயமில்லை.
- குறைந்த கட்டணங்களில் தங்குமிடவசதிகள்
- 20 மணித்தியாலங்கள் வேலைசெய்யக்கூடிய வாய்ப்பு.

(குறிப்பு: வீசா கிடைத்தபின்னரே கட்டணம் அறவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்- FULL PACKAGE)

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

## STUDY IN LONDON




கடந்த 6 மாதங்களில் 35 மாணவர்களிற்குமேல் City&Guilds(UK) English Diploma (A1,B1) பரீட்சையில் சிறந்த, அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.



பரீட்சையின் பின்னர் UK நாட்டின் Diploma சான்றிதழை பெற்று லண்டன் கல்லூரிகளில் உயர் கல்வியை தொடரமுடியும்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள்.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447, 021 7200 989

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில்

e mail: chec.usr@gmail.com Gov.Reg No:TN/DS/UC/0324 (C-5152)



## புலமை கல்வி நிறுவனம்

தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
ஆசிரியர் திரு. க. கலாமோகன் BA, Dip. in Teach.
காலம் : 14.10.2013 திங்கட்கிழமை

தரம் 4 (தற்போது 3) மாலை 4.00 பிரிவு - I
தரம் 5 (தற்போது 4) மாலை 5.00 பிரிவு - II

சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

- இயக்குநர் -



## Spoken English & Diploma in English

City & Guilds

**Opening the Door to the Modern World**

International English Language Qualifications
City & Guilds Offers a wide range of English language Qualifications suitable for students and people of all ages engaged in work & business. They develop Speaking, Writing, Reading and Listening skills using real- life examples and tasks from entry to advanced level.



குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற: சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப் பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திக்கையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி.

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், I.N.G.O.S மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பினைப் பெற அரியதோர் பாடநெறி. City & Guilds இன் சான்றிதழ்கள் உலகம் முழுவதும் அங்கிகாரம் பெற்றவையாகும்.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
**14-10-2013**
Batch - I = 8.30 - 10.30
Batch - II = 2pm - 4pm



(C-5133)

## BRITISH COLLEGE OF ENGLISH

City & Guilds Approved centre
192, Navalar Road, Jaffna. T.P: 0755435089, 0778803887


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.